விலை ரூபா 2-00 | 12 பக்கங்கள்

# ஈழநாடு
வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 | கார்த்திகை 10 | ரபி-அவ் 1 | யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | (25—11—84) | இதழ் 283

## இப்படி ஒரு யோசனை

[இ. கந்தசாமி]

கணவனும் மனைவியும் அரசாங்க ஊழியராக இருந்தால் ஆளுக்கு ஐம்பது ரூபாயே சம்பள உயர்வு வழங்குவது குறித்து திறைசேரி உயர் அதிகாரிகள் இப்போது ஆலோசித்துவருவதாகத் திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன நிதியமைச்சர் 'பட்ஜட்' உரையில் அரசாங்க ஊழியர்களுக்கு நூறு ரூபா சம்பள உயர்வு வழங்குவதுகுறித்து அறிவித்திருந்தார்.

# கிழக்கு கடலில் ஹெலிகொப்டர் சூட்டில் நான்கு இளைஞர்பலி!

## பொலிஸ் நிலையத்தைத் தகர்க்க படகுகளில் வந்தார்களாம்!

[இரா. உதயகுமார்]

கிழக்கு மாகாணத்திலுள்ள பொலிஸ் நிலையமொன்றைத் தகர்ப்பதற்காக நேற்று ஆயுதங்களோடு வந்துகொண்டிருந்த தீவிரவாத இயக்கத்தின் இரண்டு படகுகளின் மீது ஹெலிகொப்டரிலிருந்து ஆயுதப்படை சுட்டதில் நான்கு தீவிரவாதிகள் பலியுண்டதாகப் பாதுகாப்புப்படை அறிக்கையொன்றுதெரிவித்தது.

திருகோணமலையிலிருந்துஇந்தப் படகுகள் புறப்பட்டுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து ஹெலிகொப்டரில் படை வீரர்கள் தாழப் பறந்துசென்றதாகவும், படகுகளைச் சுட்டதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்தது.

வாகரைக்கடலில் வந்துகொண்டிருந்த யந்திரப்படகுகளை ஹெலிகொப்டர் துரத்திச் சுட்டதாகவும், பெருந்தொகையான ஆயுதங்களும் கைக்குண்டுகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகவும் இவ்அறிக்கை தெரிவித்தது. வாகரைக்

(12ம் பக்கம் பார்க்க)

---

'தீவிரவாதிகளுக்கு [redacted]

## ஆயுதங்கள் வந்து குவிகின்றன!' பிரதி அமைச்சர்

(இ. கந்தசாமி)

''இலங்கையிலுள்ள தமிழ்த் தீவிரவாதிகளுக்குக் கொள்கலன்கள்மூலம் வெளிநாட்டிலிருந்து ஆயுதங்கள் கப்பல்களில் வந்து குவிகின்றன. கொழும்புத் துறைமுகத்தில் பரிசோதனை செய்யும் சுங்க அதிகாரிகள் தமிழர்களாக இருப்பதால் இந்த ஆயுதங்கள் எவ்விதக் கஷ்டமுமின்றி உரியவர்களைப் போய்ச் சேர்கின்றன'' என்று பிரதி பிரதேச அபிவிருத்தி அமைச்சர் திரு. வின்சென்ற் டயஸ் பாராளுமன்றத்தில் கூறினர்.

உடனடியாக இந்தத் தமிழ் அதிகாரிகளை அப்புறப்படுத்த வேண்டுமென்றும் கூறினர்.

---

## தப்பியவர்கள் யாழ் பொலிஸ் நிலையத்தில்!

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரிப் பொலிஸ் நிலைய அலுவல்கள் யாவும் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்தே இயங்கும்.

உதவிப் பொலிஸ் அதிபர் திரு. தவலிங்கம் சாவகச்ாசரிப் பொலிஸ் நிலைய அலுவல்களுக்குப் பொறுப்பாக இயங்குவார்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது தப்பிய பொலிசார் யாழ். பொலிஸ் நிலையத்திலிருந்து கடமையாற்றுவார்கள்.

சாவகச்சேரியிலுள்ள மக்கள் ஏதாவது புகார்செய்யவேண்டுமானல் யாழ் பொலிஸ் நிலையத்திற்குச் சென்று புகார் செய்ய வேண்டுமெனப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

---

## 'அந்த' லொறி

[சாவகச்சேரி]

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பாவிக்கப்பட்டதாக கூறப்படும் லொறி நேற்று யாழ்பொலிஸ் நிலையம் கொண்டுவரப்பட்டு பாதுகப்பில் வைக்கப்பட்டுள்ளது. தொலைத்தொடர்பு இலாகாவுக்கு சொந்தமான இந்த லொறியை, இலாகா பொறியியலாளரும் பரிசோதகரும், பொலிசில் ஒப்படைத்தனர்.

---

## கொழும்பு — யாழ் ரயில் சேவை

[கொழும்பு]

ரயில் சேவை இன்று முதல் வழமைக்குத் திரும்பியுள்ளதாக அரக அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

கொழும்பு கோட்டையிலிருந்து இன்று அதிகாலை 5 45 மணிக்கு யாழ்ப்பாணத்துக்குப் புறப்படும். பின்னர் இந்த ரயில் இன்று பிற்பகல் 2 10 றணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் செல்கிறது. [சூ]

---

## 3 சடலங்கள் அடையாளம்!

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் மீட்கப்பட்ட 27 சடலங்களில் அடையாளங் காணப்படாமல் இருந்த மேலும் 3 சடலங்க அடையாளம காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது

ஒரு இன்ஸ்பெக்டர், 2 சார்ஜண்டுகள் இவர்கள்.

---

சாவகச்சேரி தாக்குதல் [redacted]

## 14 பேர் 'மர்ம' மறைவு!

(கொழும்பு)

''சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலின்போது அங்கு கடமையாற்றிய 14 பொலிஸாரைக் காணவில்லை'' என்று பிரதமர் திரு ஆர். பிரேமதாசா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த பொலிஸ் நிலையத் தாக்குதல் சம்பவத்தில் 27 சடலங்கள் மீட்கப்பபட்டதாகவும், இதில் நான்கு சடங்கள் அடையாளம்காணப்படவில்லை

(12ம் பக்கம் பார்க்க)

---

களுதாவளை சம்பவம் [redacted]

## பொலிஸ் சூட்டதில் இளைஞர் பலி!

[மட்டக்களப்பு]

களுதாவளைச் சம்பவத்தின் போது பொலிசார் சுட்டதில் தட்சணாமூர்த்தி என்ற 25வயது இளைஞர் மரணமானர். இவர் இரண்டு குழந்தைகளுக்குத் தந்தை; களுதாவளை வாசி

களுதாவளையில் முற்றுகையிட்ட பொலிசார் அங்கு உமா மகேஸ்வரன் தலைமையில் இயங்கும் கேஷ்டியைச் சேர்ந்த பத்துப் பேரைக் கடந்த வியாழக்கிழமை கைது செய்ததாகப் பொலிஸ்வட்டாரங்கள் தெரிவித்தன. அப்போதே இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நடந்தது. இவரது மரணம் குறித்து பிரேதபரிசோதனை நடந்து சடலம் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு களுதாவளைக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 125 நடுத்தரவயது ஆண்களும், இளைஞர்களும் பொலிசாரால்

(12ம் பக்கம் பார்க்க)

---

## வங்கிக் கிளை மீது குண்டு வீச்சு!

(மட்டக்களப்பு)

வாழைச்சேனையிலுள்ள மக்கள் வங்கிக்கிளை, கடந்த வெள்ளிக்கிழமை இரவு பத்தரைமணியளவில் இனந்தெரியாத நபர்களின் குண்டுவீச்சுக்கு இலக்கானது

குண்டுவீச்சினல் வங்கிக் கட்டடத்தின் சில கண்ணாடி யன்னல்கள் மட்டும் சேதமுற்றன கடமையிலிருந்த இரண்டு பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு எதுவித காயமும் ஏற்படவில்லை.

ரோந்துப் பொலிஸார்உடனடியாக ஸ்தலத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டு தேடுதல் நடத்திய போதிலும் நேற்று மாலைவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

---

## 'சாவகச்சேரி தாக்குதலில்சோவியத் ஆயுதங்கள்'

[கொழும்பு]

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலுக்கு ரஷ்யாவில் உற்பத்திசெய்யப்பட்ட நவீனரக ஆயுதங்கள் பாவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிசார் நம்புகின்றனர்.

விசாரணைகளில்ருந்து இது தெரியவந்துள்ளதாகக் கூறப்படுகிறதுர்.

ரஷ்யாவில் உற்பத்தியான குண்டுகளும், ஏ. கே 47ரக ரைபிள்களும் பாவிக்கப்பட்டுள்ளது நம்பகமாகத் தெரியவந்துள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தாக்குதலையடுத்து யாழ்ப்பாணப் பகுதியில் தாழப் பறந்து நிலைமையைக் கவனித்த ஹெலிகொப்டர் மீது தீவிரவாத இளைஞர்கள் துப்பாக்கியினல் சுட்டு அழிக்க முயன்ரூர்களென்றும் பொலிசார் தெரிவித்தனர்.

தீவிரவாதிகளுக்கு ரஷ்யாவில் உற்பத்தியான ஆயுதங்கள் இந்தியாவில் கள்ளச் சந்தையில் தாராளமாகக் கிடைக்கிறதென்றும், வேண்டியளவு அங்கு பெற்றுக்கொண்டு இங்கு வந்து தாக்குதலை நடத்துகின்றனர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

இருபாலையில் 'சுருகன்வயல்' அல்லது 'கல்லுட்டி' எனப்படும் நாற்பது பரப்பு நெல் வயல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. சிற்றம்பலம், பன்னாலை, தெல்லிப்பளை (807)

ELF 350 லொறியும் (மூடிய பொடியுடன்) 7/9236 இலக்க முடைய 404 காரும் விற்பனைக்குண்டு. 'திருமகள் அரிசி ஆலை' சி. எஸ். கே. ஸ்தாபனம் 133, காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம். 819

கொழும்புத்துறையில் உப தபாற் கந்தோர், மகாவித்தியாலயம் அருகில் பிள்ளையார் கோவிலுக்கு முன்பாக சச்சேரி, சுண்டிக்குளி, சென்ற் ஜோன்ஸ் கல்லூரிக்கு ½, ¾ மைல் தூரத்தில் 3½ பரப்பு குடியிருக்கக்கூடிய காணி உடன் விற்பனைக்குண்டு. இருபக்க பாதை கொண்டது. தொடர்பு: நாகேஸ்வரி (டீச்சர்), கருவேலடி லேன், கொக்குவில் கிழக்கு. (836)

அழுத்தமான ஆட்டுக்கல், அம்மி, கல்உரல், அனைத்தும் கைதேர்ந்த கலைஞரால் கடையப்பட்டது. தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் வவுனியா கந்தசாமி சாவகச்சேரியில் அல்லது சுல்த்தான் அப்துல்காதர் சகோதரர்கள், கண்டி வீதி, சாவகச்சேரி. 778

''காங்கேசன்துறை ஸ்ரேசனுக்கு அருகாமையில் 2½ பரப்புக் காணிஅத்திவாரம், கிணறு சுற்றுமதிலுடனும், தொண்டைமானாறு நெல்லியடி வீதியில் 100 யார் தூரத்தில் வீடு கட்டக்கூடிய 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு தொடர்பு: ந பத்மநாதன், சென் அன்தனிக் வெஸ்ட்லேன் காங்கேசன்துறை. 813

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி நாச்சிமார் கோவிலடி 50 யார் தூரத்திற்குள் றோட்டு முகப்புடன் 1 பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: கிருஷ்ணபிள்ளை அன்சன்ஸ், 591, காங்கேசன் துறை வீதி நாச்சிமார் கோவிலடி 860

அரியாலையில் மாம்பழம் சந்திக்கு அண்மையில் 1½ பரப்பு காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு: திருமதி த. வைத்திலிங்கம் 11/1 செம்மணி லேன் அரியாலை, யாழ்ப்பாணம் 862

## வாடகைக்கு

சகல வசதிகளும் பொருந்திய சி. எஸ். கே. இரண்டாம் கடைக் கட்டடத்தில் உள்ள கடைகள் இரண்டு வாடகைக்குண்டு. மேல் மாடியிலும் கடைகள் கட்டவுள்ளோம். தொடர்பு கொள்ளவும்: உரிமையாளர், சி. எஸ் கே. யாழ்ப்பாணம் 820

மருத்துவ பீடத்திற்கு அண்மையில் வளாக மாணவிகளுக்கு சாப்பாட்டு வசதிகளுடன் தங்கும் இடம் உண்டு. தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: ஹரன் ரெக்ஸ்ரைல்ஸ், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் தொலைபேசி: இல 22752, அல்லது வீடியோ புளசம்ஸ், 30 சிவப்பிரகாசம் றோட், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 839

மானிப்பாய் சந்தையில் பிரதான வீதியில் உள்ள இரண்டு கடைகள் வாடகைக்கு விடப்படும். தொடர்பு: சி சிவலிங்கம் சிவசுந்தரி ஸ்ரோஸ், No 2, மத்திய சந்தை, மானிப்பாய். 849

## தேவை

யாழ்நகரின் மத்தியில் அலுவலகம் ஒன்று அமைப்பதற்கு இடவசதி தேவை. மேல்மாடி விரும்பத்தக்கது. விளம்பர இல 864, C/O ஈழநாடு லிமிட்டெட் யாழ்ப்பாணம். 864

லேத்மன் [Lathemen] வேலைக்கு உடனடியாக வெற்றிடங்கள் உண்டு. அனுபவமுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும். இதற்குமுன் வேலை செய்த அத்தாட்சிப் பத்திரம். சம்பளம் எவ்வளவு எதிர்பார்க்கப்படும் என்றவிபரங்கள் முதல் கடிதத்திலேயே தெரியப்படுத்தவும். எவர்சில்வர் இன்டஸ்றீஸ் லிமிட் யூனிற் 5,6 கைத்தொழில்பேட்டை அச்சுவேலி. 859

## காணவில்லை

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அடையாள அட்டை பெயர் டெரி மாகான் கணேசலிங்கம் [இல 681950125 V] தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ் கண்ட விலாசத்தில்ஒப்படைக்கவும் எஸ். ஜெயராஜா 117 டேவிட்வீதி யாழ்ப்பாணம். 854

**யாழ்ப்பாணம் அக்கடமி**
**க. பொ த. உயர்தர பரீட்சை ஆகஸ்ட் 1985**

## மீட்டல் வகுப்புகள்

85ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகள் 3-12-84ல் ஆரம்பமாகின்றன. பாடத்திட்டம் முற்றாக மீட்டல் செய்யப்படும். சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விபரங்கள் தேவையாயின் காரியாலயத்தில் அறிந்துகொள்ளலாம்.

**எம்மிடம் பயின்ற மாணவர்களின் பெறுபேறுகள் எமது பயிற்றும் திறமைக்குச் சான்றாகும்.**

அதிபர்.
தொலைபேசி எண்: 22617.
376, பிரதான வீதி
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
826

## யாழ், மாநகராட்சி மன்றம்

### சந்தைக் குத்தகை கேள்விகள் – 1985 காலநீடிப்பு

மேற்படி கேள்விகளுக்கான முடிவு திகதிகள் பின்வருமாறு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது

[1] 26-11-84 திங்கட்கிழமை முற்பகல் 10-30 மணிவரை கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும்

[2] 27-11-84 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10-30 மணி வரை கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு 11-00 மணிக்குத் திறக்கப்படும்.

சீ. வி. கே. சிவஞானம்
மாநகர ஆணையாளர்
யாழ்ப்பாணம்

மாநகர அலுவலகம்
யாழ்ப்பாணம்
24-11-1984 855

## இந்த வான் யாருடையது?

(யாழ்ப்பாணம்)

மஞ்சள் நிற வான் ஒன்று கடந்த மூன்று நாட்களாக அனாதரவான நிலையில் காணப்படுகிறது

இராசாவின் தோட்ட வீதியில் புகையிரத நிலையக் கடவையில் இந்தவான் நின்றது. (மா)

## மின் விநியோகம் தடைப்படாது!

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் இன்று 25ம் திகதி மின்விநியோகம் தடைப்பட மாட்டாது என்று இலங்கை மின்சார சபையின் சுன்னாகம் யாழ் பிரதேச அலுவலகம் அறிவித்துள்ளது.

நேற்று சனிக்கிழமை 24ந் திகதியும், இன்று ஞாயிற்றுக்கிழமை 25ந்திகதியும் சில முக்கிய திருத்தவேலைகள் காரணமாக யாழ்ப்பாணப் பகுதியில் மின்சாரம் தடைசெய்யப்படவிருந்தது

ஆனாலும் ஊரடங்குச்சட்ட நேரம் காரணமாக இந்த மின்சாரவேலைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன், மின்விநியோகத் தடை இருக்கமாட்டாதெனவும் தெரிவிக்கப்பட்டது.

## அடையாள அட்டை

நீர்வேலியைச் சேர்ந்த திரு குமாரவேலு ஆறுமுகநாதனின் அடையாள அட்டையை திரு. பி. ரஞ்சனும். கைதடி ஒடிவெல்லத் தோட்டத்தைச் சேர்ந்த திரு கதிரவேலு முத்துக்குமாரு மயில்வாகனத்தின் அடையாள அட்டையை திரு கே. சந்திரனும் கண்டெடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## 'பூஸா' முகாமிலுள்ளோர் தப்பியோடியதாக வதந்தி

(கொழும்பு)

காலி பூஸா முகாமில் தடுத்துவைக்கப்பட்டவர்கள் தப்பியோடியதாக மாகோப் பகுதியில் வதந்திகள் பரப்பப்பட்டுள்ளது. இந்த வதந்திகளை நம்பவேண்டாமென்று அரசாங்கம் பொதுமக்களைக் கேட்டுள்ளது.

பூஸா முகாமில் 30 பேர் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டது.

### ஓராண்டு நினைவு அஞ்சலி



சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், உரும்பராயைப் புகுந்த இடமாகப் பெற்றவரும், பிரபல சமூக சேவையாளருமான திரு ஆறுமுகம் முத்துவேலு அவர்களின் ஓராண்டு நினைவுதினம் இன்றாகும்.

அன்னாரின் நினைவு தினத்தையொட்டி இன்று நண்பகல் (25-11-84 ஞாயிறு) திருநெல்வேலி சைவ அநாதைகள் இல்லத்தில் அன்னதானம் நடைபெறுகின்றது

எங்கள் குடும்பமுதல்வரின் ஆன்ம ஈடேற்றம் குறித்து இறைவனைப் பிரார்த்திப்போமாக.

மனைவி, மக்கள், மருமக்கள் பேரர் 'சுந்தரி வாசம்', வடக்கு உரும்பராய் 865

உ
சிவமயம்

## உத்திரக் கிரியை அழைப்பு

நிகழும் இரத்தாசி ஆண்டு ஐப்பசி மாதம் 12ம் திகதி (28-10-84) ஞாயிற்றுக்கிழமை அன்று சவுண்டேஸ் உதைபந்தாட்டக்கழக முன்னை நாள் தலைவரும், கொழும்பு ஞானமணி அன்கோ யோகரட்ணம் ஸ்ரோர்ஸ் ஆகிய வர்த்தக ஸ்தாபனங்களின் உரிமையாளருமான இளையதம்பி மாணிக்கம் (ஜே. பி) அவர்கள் இறைவனடி சேர்ந்தார்கள். அது தொடர்பாக நிகழும் இரத்தாசி ஆண்டு கார்த்திகை மாதம் 10ம் திகதி (25-11-84) ஞாயிற்றுக்கிழமை அன்று முற்பகல் 10 மணி அளவில் கரம்பொன் மேற்கு கண்ணகை அம்மன் கோவிலில் அந்தியேட்டியும் அடுத்த நாள் திங்கட்கிழமை (26-11-84) அன்று மு. ப. 10 மணி அளவில் எங்கள் இல்லத்தில் சபீண்டீகரணமும் நடைபெற இருப்பதால் எங்கள் சுற்றத்தாரையும் நண்பர்களையும் கலந்து எங்கள் குலமுதல்வரின் ஆத்மாசாந்தி அடைய பிரார்த்தித்துக் கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்

திருமதி கனகம்மா மாணிக்கம், மா விஜயரட்ணம், விஜயலக்சுமி சோமாஸ்கந்தன், மா.யோகரட்ணம், யோகலக்சுமி பாலசுப்பிரமணியம்.

857

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### திரு. நாகலிங்கம் இரகுநாதன்

உரிமையாளர்
(ரி. என். லிங்கம் அன் சன்)



தோற்றம்:
4-5-1920

மறைவு:
26-10-1984

அன்புகாட்டி, பாசத்துடன் வழிநடத்தி பண்பாய் வாழ வைத்த அன்புத்தந்தையே, நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் தெய்வமாக நின்று எமக்கு நல்ல வழிகாட்ட வேண்டுகிறோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் கலங்கும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

179, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 861

## இரண்டாம் ஆண்டு நினைவு


அமரர் குரும்பசிட்டி

### வேலுப்பிள்ளை வன்னியசிங்கம்

மண்ணகத்தில்:
30-10-1919

விண்ணகத்தில்:
18-11-1982

திதி 25-11-1984



அன்பும் அமைதியும் ஒருங்கே அமைந்து பண்புடனும் பாசத்துடனும் எம்மை அரவணைத்து இன்முகம் காட்டி இனிமையுடன் உரையாடி எண்ணிய எண்ணமெல்லாம் வெற்றியுடன் முடித்து விண்ணகம் விரைந்திட்ட குடும்பத் தலைவா! நின்னரிய ஆசிகளுடன் நின் வழி நடக்க ஈராண்டு நினைவினில் உறுதியது சொல்வோம் மண்ணகம் உள்ளவரை மறவோம் உம்நினைவு.

மனைவி, மக்கள்,
மருமகன், பேரன்.

ஸ்ரீ நிலையம்,
குரும்பசிட்டி. 851

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# பொன்றப் புகழ்படைத்த
# சேர் பொன். இராமநாதன்

## கனகசபாபதி நாகேஸ்வரன்

எமது தாயகம் முடியாட்சியின் கீழானகுடியேற்றநாடாக விளங்கிய காலை, பிரிட்டிஷ் ஆட்சியின் உச்சக்கட்ட ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்தபோது எமது தேசத்துக்காகத்தொண்டாற்றியதில். பெரும் பங்கு கொண்ட சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களைப் பற்றிக் குறிப்பிடாமல் இருப்பின் இலங்கையின் சரித்திரம் பூரணத்துவம் வாய்க்கப் பெற்றதாகாது. பிரிட்டிஷ்ஆதிபத்தியத்தையும், வெளிநாட்டுச் செல்வாக்கையும் எதிர்த்து இலங்கையருக்காகவும், சுதேச கலாசாரத்துக்காகவும் போராடிய தீரர் அவர்.

### சட்டசபையில்
### நியாயவாதம்

இராமநாதன் அவர்கள் 1851ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ந் திகதி கொழும்பில் பிறந்தார். முதலில் குயீன்ஸ் அக்கடமியிலும் (பின்னர் இதுவே ரோயல் கல்லூரியாக மாற்றம் கொண்டது) பின்னர் சென்னையிலுள்ள பிரசிடென்சி கல்லூரியிலும் கல்வி பயின்றார். 1873ம் ஆண்டு கொழும்பில் நியாயவாதியாகத்தொழிலாற்றத் தொடங்கினார்.

இராமநாதன் அவர்களுடைய மாமனாரான சேர் முத்துக்குமாரசாமி அவர்கள் நெடுங்காலமாக இலங்கைச் சட்டசபையிலே தமிழ்பேசும் மக்களின் பிரதிநிதியாக இருந்தவர். அவருக்கு முன் அவரின் தந்தையார் ஆறுமுகத்தாபிள்ளை அங்கத்தவராய் இருந்தார். சேர். முத்துக்குமாரசுவாமி 1879ம் ஆண்டில் இறந்து போக அவருடைய இடத்தில் இராமநாதன்அவர்களே இருத்தல் வேண்டுமென்று ஆறுமுக நாவலர் முதலான பெரியோர்கள் செய்த பிரசாரத்தால் இராமநாதன் அவர்கள் இளம் வயதிலேயே சட்டசபை அங்கத்தவரானார். அவர் 27-8-1879ல் சட்டசபையை அலங்கரிக்கத் தொடங்கினார். தமது 80ம் வயதில் 1930ம் ஆண்டில் இயற்கையெய்தும் வரை இலங்கையின் பெருந்தலைவராய் மிளிர்ந்தார்.

### வாக்குவன்மை

எதிர்காலச் சந்ததியினரின் நன்மை கருதி உயர்நீதிமன்றம் 1820ம் ஆண்டு முதற்கொண்டு மேற்கொண்ட முடிவுகளைச் சேகரித்துப் பேணிக்காத்ததுடன், அவற்றை தொகுத்து ''இராமநாதனின் அறிக்கைகள்'' என்ற பெயரில் வெளியிடவுஞ் செய்தார். அதன்பின்னர், இந்நாட்டின் நீதிபதிகளுக்கும், சட்டத்துறையில் பணிபுரியும் ஏனையவர்களுக்கும் மிகவும் இன்றியமையாதவைகளாக விளங்கிவரும் ''உயர்நீதிமன்றச்சுற்றறிக்கைகள்'', ''புதியசட்ட அறிக்கைகள்'' ஆகிய உத்தியோகபூர்வ அறிக்கைகளின் பத்திராதிபராக அவர் நியமிக்கப்பட்டார்.

கடினமாக உழைப்பதில் அவருக்கு இருந்த மன ஆற்றலும் தமது கருத்துக்களை அழகுறவும் தெளிவுறவும் வன்மையுடனும் கூறுவதில் அவருக்கு இருந்த மொழி ஆட்சித்திறனும் அவரின் சாந்தமான குண இயல்பும், மிகக்குறுகிய காலத்தில் ஏனைய வழக்கறிஞர்கள் மத்தியில் அவரைத் திறமைமிக்கவராக்கியது சட்டகல்விச் சபையின் அங்கத்தவராக இருந்தவேளை, சட்ட மாணவரின் கல்வி முறைக்கும் பரீட்சை முறைக்கும் தேவையான விரிவான திட்டத்தை முதன்முதலில் தயாரித்தவர் அவரேயாவார் சட்ட மாணவர்களுக்கான போதனை வகுப்புகளில் 1884ல் முதன் முதலில் விரிவுரைகளையும் நடத்தினார் இராமநாதன் அவர்கள் 1892ல் சொலிசிட்டர் ஜெனரல் பதவியை ஏற்றுக்கொண்டார். மூன்று தடவையாக பதில் அட்டோர்னி ஜெனரலாகவும் கடமையாற்றினார். 1903ம் ஆண்டில் இலங்கைக்கு இராச வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டபொழுது இராமநாதன் அவர்களது பெயர் முதலாவது பட்டியலில் இடம்பெற்றிருந்தது.

### ஈழத்துக்
### கிளாட்ஸ்ரோன் பிரபு

இராமநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டிய ஆங்கிலேய அரசாங்கம் அவருக்கு 1889ம் ஆண்டில் சீ எம் ஜீ என்னும் பட்டத்தையும் 1903ம் ஆண்டில் கே, சீ என்னும் பட்டத்தையும் வழங்கிற்று. அக்காலத்தில் அவரொருவரே அப்பட்டத்தைப் பெற்றவராவார்.

சட்டசபையில் சேர்.பொன் இராமநாதனின் பேச்சுக்குத் தனிமதிப்பிருந்தது. ஐரோப்பியர் பலர் தமது ஓய்வுநேரங்களில் அவரின் பேச்சை நயப்பதற்காகச் சட்டசபை மண்டபத்திற்குப்போவது வழக்கமாயிருந்தது. ஐரோப்பிய அங்கத்தவராய கிரிஸ்ரி என்பாருடன் இராமநாதன் அவர்கள் விவாதிப்பது பெரிய இலக்கிய விருந்தாய் இருந்தது என்பர். ஈழத்துக் கிளாட்ஸ்ரோன்பிரபு என்னும் பாராட்டைப் பெற்றவர் இராமநாதன்.

### தேசியத் தலைமை

சாதிசமயவேறுபாடு மொழி கருதாது பொதுமக்களுக்குத் தம் உயிரையும் பொருட்படுத்தாது தொண்டுசெய்த உத்தமர். அவர் கொண்டுவந்த அமைப்புக்கள் திருத்தங்கள், மாற்றங்கள் யாவும் சேவை மனப்பான்மையுடன் செய்யப்பட்டனவாகும்.

சட்டசபைக்கு ''கல்வி பெற்ற இலங்கையருக்கு'' எனப் புதிதாக உருவாக்கப்பட்ட இடத்திற்கு 1911ல் நடைபெற்ற தேர்தலில் டாக்டர் மாக்கர்ஸ் பெர்ணாண்டோவுடன் போட்டியிட்டு வெற்றிபெற்ற அன்றே சேர் இராமநாதன் அவர்கள் சகல சமூக மக்களாலும் மதிக்கப்படும் ஒரு தேசியத் தலைவர் என்ற ஆகிருதியைப் பெற்றிருந்தார் என்பதற்குப் போதுமான சான்றாகும். அவர் அப்போதுபெற்ற வெற்றியானது வாக்காளர்களின் பெரும்பான்மையினராக விளங்கிய சிங்கள மக்கள் அவர்ஒரு தேசியத் தலைவருக்குரிய தகைமைகளைப் பெற்றிருந்தார் என்பதில் நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதைத் தெட்டெனே எடுத்துவிளக்கியுள்ளது.

சேர் இராமநாதன் அவர்கள் 50 ஆண்டுகளாகச் சட்டசபையில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவராயும் நியமன அங்கத்தவராயும் உத்தியோக பூர்வ அங்கத்தவராயும் தெரியப்பெற்ற அங்கத்தவராயும் இருந்தார். அத்தகைய தகுதியும் மேன்மையும் இலங்கையில் வேறெவருக்கும் எக்காலத்தும் இருந்ததில்லை என்று கூறின்மிகையாகாது. இராமநாதன் அவர்கள் நியமன அங்கத்தவராய் இருந்த காலத்தில் 1921ம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் புதுவருட கௌரவமாக அவருக்கு 'நைற்' பட்டம் வழங்கப்பட்டது அன்று முதல் அவர் சேர். இராமநாதப்பிரபு ஆயினார்.

### தோற்றமும்
### தீட்சண்யமும்

அறிவு, ஆற்றல், செல்வம், செல்வாக்கு, ஈகை பெருந்தன்மை யாவும் சேர். இராமநாதன் அவர்களிடம் ஒருங்கே அமைந்திருந்தன. தங்க விக்கிரகம் போன்ற உருவம், தலையிலே தலைப்பாகை, நெற்றியிலே திருநீறும் சந்தனமும், கருணை பொழியும் கண்கள், புன்சிரிப்பு, நெஞ்சை அலங்கரிக்கும் நீண்ட உத்தரியம் ஆகியன இராமநாதன் அவர்களின் அழகுக்கு அழகுசெய்தன. அவரின் அறிவும் திருவும் உருவும் எவரையும் அவருக்குப் பணியவைத்தன.

### சமயப்பிரசாரம்

இளமைக்காலந் தொடக்கம் இராமநாதன் அவர்களுக்கு கீழைத்தேச கலாசாரத்திலும் சைவசித்தாந்த நெறியிலும் பேரபிமானம்இருந்தது. அவர் சைவசித்தாந்த அறிவை விருத்திசெய்வதற்கு ஆகமங்களை நன்குபயில்வதற்கு வடமொழியைப் பயின்று அருள் பராநந்தர் என்னும் பெரியாரிடம் தம் அறிவை வளம்படுத்திக்கொண்டார். திருவாசகத்தில் அதிகபற்றுள்ளவராய் இருந்தார் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய நாடுகளில் சைவசமய தத்துவங்களைப் பேசி அவற்றைநன்கு பரப்பினார். அமெரிக்காவில் சைவ சமயத்தைப்பரப்ப உதவி செய்தவர் 'மைவுன் பெல்ப்ஸ்' என்னும் அமெரிக்கப் பெரியாராவர்

### கல்வித்துறை
### முன்னோடி

சேர் இராமநாதன் அவர்கள் நாட்டின் கல்விவளர்ச்சிக்காக அரும்பெரும் தொண்டாற்றினார். சுதேச இலட்சியங்களையும் சுதேச நிறுவனங்களையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியம் பற்றி இடைவிடாது வலியுறுத்தி வந்ததுடன், மேற்கத்திய நாகரிகத்தின் லோகாயுத மேற்பார்வையில் மயங்கி அவர்களின் நடையுடை பாவனைகளைக்கண்மூடித்தனமாகப் பின்பற்றக் கூடாது எனவும் எச்சரித்தார் 1904ம் ஆண்டில் கேர்ணல் ஒல்கொட்டின் தலைமையில் நடைபெற்ற ஆனந்தாக்கல்லூரிப்பரிசளிப்பு விழாவில் அவர் ஆற்றிய உரை பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்கும் விசேஷத்துவம் வாய்ந்த தனித்துவங்களுடைய டென்ற உணர்ச்சியை அவர்

(11-ம் பக்கம் பார்க்க)

## மன்னவையில்
## ஒரு மணி

மன்னவையிலொரு மணியாய்
மருவலர்தம் வயமிழக்க மழைபெய் மேகந்
தன்னிகர் பன்னூலுரைகள்
தந்தகடலத்துவித சைவஞானி
எந்நலமும் பிறர் நலமா
யெவ்வுயிருந் தன்னுயிரா யெண்ணும்மேதை
பொலிவினியல்சேர் பொன் ராமநாதனெனும்
புலவர்கோன் புகழ்மிக்கோனே.

இலக்கிய கலாநிதி
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

★

நாடெல்லாம் நங்கையர்க்கும்
நம்பியர்க்கும் கலையாம்
நளினவிழி திறந்தொளிர
நயந்தளித்த பானு
கூடெல்லாம் ஆருயிர்கள்
கொடுவந்த பயனைக்
கூடவைக்க அவதரித்த
மெய்ஞ்ஞானக் குரவன்
ஏடெல்லாம் பாட்டாகத்
தான் பொருளாய் இருப்போன்
ஈழமணி எனும் ராம
நாதனவன் வாழி.

—நவநீத கிருஷ்ணபாரதியார்.

## மீண்டும்
## முடி ஆட்சியா?

'வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக' என்ற தேவார அடி ஒரு பேருண்மையைக் குறிக்கிறது.

தார்மீக ஆட்சியில் பருவமழை பெய்யவும் அரசாட்சி நிலைத்திருக்கவும் வாழ்த்தப்படுகிறது.

வேந்தன் என்பது நாட்டை ஆளும் அரசனைக் குறிப்பதானாலும் இன்றைய மக்கள் ஆட்சி யுகத்தில் முடிசூட்டிய மன்னனை மட்டும் அது குறிப்பதாக கருத முடியாது. 'முடிசூடா மன்னன்' என்பதும் நேருக்குடும்பத்துக்கு பிடியாத சொற்றொடர்

பாராளுமன்ற ஆட்சிக்கு வழிவகுத்த பிரிட்டனில் மன்னன் ஆட்சி படிப்படியாக மட்டுப்படுத்தி ஈற்றில் ஒழிக்கப்பட்டது நாட்டை ஆளும் கட்சித் தலைவரே ஆட்சித்தலைவராக அதிகாரம் பெற்றிருக்கிறார்.

ஒரேஒரு புறநடை, மக்களின் அபிலாஷைகளைக் குறிக்கும் சின்னமாக பரம்பரை மன்னர் ஆட்சி இன்றும் பாதுகாக்கப்பட்டுவருகிறது.

ஆளும் அரசர் இறந்தால் ''மன்னர் இறந்துவிட்டார் மன்னர் நீடூழி வாழ்க'' என்று அரண்மனையிலிருந்து குரல் எழுப்பப்படும்; அதற்குள் பட்டத்திற்குரிய மன்னர் பொறுப்பேற்றுவிடுவார்; இது ஒரு வெறும் சம்பிரதாயம்; ஆனால் பிரிட்டிஷ் மக்கள் பெரிதும் விரும்பும் ஆட்சிமுறை.

திருமதி இந்திரா காந்தி இறந்தபோது பிரிட்டிஷ் பத்திரிகைகள் 'காந்தி இறந்துவிட்டார் காந்தி வாழ்க' என்ற சிலேடையில் இது என்ன மன்னராட்சியா என்று விமர்சிக்கின்றன நாமறிந்த ஆட்சி முறைகளில் ஜனநாயக [குடியரசு] ஆட்சியே மிகச்சிறந்தது என்பது இந்திராவின் இறுக்கமான ஆட்சிக்கொள்கை.

28-11-84 புதன்கிழமை
பெரியாரின்
குருபூசையாகும்.

# எமது சிறுகதை




விடிந்தும் விடியாத வேளை

வீட்டுக்கு வெளியே—

மழையின் வேகம் கூடுவதும் மறுமுறை குறைந்து தூறுவதுமாக இயற்கை விதரணையில்லாமல் விளையாடிக்கொண்டிருக்கிறது.

குளித்து முடிந்த நிர்மலா கழுவிப்பிழிந்த துணிகளை தோளில் போட்டுக்கொண்டு கிணற்றடியைவிட்டு நடந்தாள். கட்டிக்குளித்த ஈரப் பாவாடை கால்களை இடறியது. ஒரு கையால் அதைச் சற்று உயர்த்திப்பிடித்துக் கொண்டு முற்றத்தைக்கடந்து வீட்டின் பின்விறுந்தைக்கு வந்தாள்.

நீளமாகக் கட்டியிருந்த கொடியில் தோழில் கிடந்த ஈரத்துணிகளை ஒவ்வொன்றாக எடுத்துவிரித்துப் போட்டாள் சற்று நேரத்தில் உடுப்பை மாற்றிக்கொண்டு வீட்டின் முன் பகுதிக்கு வந்தாள்.

அப்பொழுதுதான்—

அவளுடைய வீட்டுக்குஅடுத்தடுத்த வீட்டிலிருந்து வரத் தொடங்கியது அந்த நாதஸ்வர இசை.

சமீபகாலமாக நாதஸ்வர வித்துவான் காந்தமூர்த்தியின் மகன் சாந்தமூர்த்தி நாதஸ்வரம் வாசிக்கப் பழகுகிறான். காலையில் எழுந்தால் பூபாளம் கல்யாணி, தோடி இராகங்களை வாசித்துப் பழகு' என்பது அவன் தந்தையின் கட்டளை.

முன் விறுந்தைக்கு நிர்மலா வந்தபோது மழை இன்னமும் விடவில்லை. நாதஸ்வர ஓசை தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது

ஹாலைக்கடந்து வலது பக்கம் திரும்பினால் ஒரு அறை— சாமி அறை அது. மற்றஅறைகளைவிட அந்த அறைக்கே முக்கியத்துவம் கொடுத்து அழகுபடுத்தியிருந்தாள் நிர்மலா. அந்த அறையைத் திறந்துகொண்டு உள்ளே சென்றாள்—

எத்தனை ரம்மியமான காட்சி. தெய்வீக மணம் பரவும் அந்த அறையில் வீற்றிருக்கும் கமல விநாயகனின் எழிற்கோலத்தை —திவ்விய அழகை கூப்பிய கரங்களுடன் நாளெல்லாம் அங்கேயே பார்த்தபடி நின்றுவிடத் தூண்டிவிடும் அற்புதச் சித்திரம் எத்தனை முறை பார்த்தாலும் அலுப்போ சலிப்போ ஏற்படாது. பதிலுக்கு பற்றும் பக்தியும் எஞ்சி நிற்கும். விநாயகனே நேரில்வந்து அந்த அறையை எட்டிப் பார்த்தால் அதுதான்தானா என்று ஆச்சரியப்படுமளவிற்கு இருந்தது அந்தச் சித்திரம். அருளொளி வீசும் அந்த அற்புத வுருவை— கருணையின் வடிவை வரைந்துவிட்டவன் எப்படிப்பட்ட ஓவியனாக இருக்கவேண்டும்? அவனுடைய கைவிரல்களை மணலோ— தணலோ தின்னத்தானே போகிறது என எண்ணத் தூண்டும் அபார கற்பனை

சாமி அறையைத் திறந்த நிர்மலா அடக்கமாக— அமைதியாக படத்தின் முன்சென்று நின்றாள். கரங்கள் தானாகக் குவிகின்றன. கண்ணிமைகள் மூடுகின்றன ''விக்கினேஸ்வரா அவர் நலமே இருக்க நல்வழி காட்டு'' அவள் இதழ்கள் மெதுவாக அசைகின்றன ஐந்து நிமிஷம் அப்படியே நிற்கின்றாள். கண்ணிமைகளைத் திறந்தவளின் விழிகளில் இருந்து இரு துளி கண்ணீர் கன்னங்களில்வழிந்து மார்பில் விழுந்து தெறித்தன. அவள் தியானம் முடிந்து விட்டது சாமியறைக் கதவைச் சாத்திக்கொண்டு வெளியே வந்தாள் நிர்மலா. இன்று நேற்றல்ல. கடந்த நான்கு வருஷங்களாக அவள் இப்படித்தான் விநாயகனை வழிபடுகிறாள். இதுவரை தனக்காக எதையுமே அவள் வேண்டிநின்றவளல்ல. சகலதும் தன் கணவனுக்காகத் தான்.

''பிள்ள!'' கண்களைத் துடைத்தபடி தன்னைக்கடந்து சென்றவளை பாசத்தோடு அழைத்தார் மயில்வாகனம். படுத்திருந்த பாயை பாதிவரை மடித்துவிட்டு மறுபாதியில் இருந்துகொண்டே சுவரோடு சாய்ந்துகொண்டார்.

''என்னப்பா!'' அவரருகே வந்துநின்றாள் நிர்மலா.

''இப்படியே எந்தநாளும் பனியிக்கை மழையிக்க குளிருக்க எழும்பிக் குளிக்கிறாய், தாயில்லாதவள் நீ! தகப்பன் இல்லாதவள் உன்மகள் உனக் கொண்டுவந்திட்டா நான் என்ன செய்வன்?''

''பிள்ளையார் விடமாட்டார்''.

''விடாத நம்பிக்கையோட தான் எல்லோரும் சுவீப் டிக்கட்டை வாங்கினம் எல்லோருக்குமா விழுகிது. இந்தமுறை நல்லா விளைஞ்ச என்ரை மிளகாய்வெங்காயம் என்னாச்சு? நம்பிக்கை எல்லாமே நடந்துவிடுகிறதில்லை. செய்யிறதை வேண்டாமெண்டயில்ல. அதுக்கொருகாலநேரம் இல்லையா?''

''அடுப்பிலை கேற்றில வைச்சிட்டு வாறனப்பா''.

''பாமா எழும்பீற்றாளா?''

''இல்லை நேரம் கிடக்கு!'' நடந்துகொண்டே சொன்னாள் நிர்மா.

தலைமாட்டில் இருந்த புகையிலையை எடுத்து விரித்தார் மயில்வாகனம். அஞ்சு ரூபாய்க்கு வாங்கின போயில கூட மழைக்கு இளகிப் போச்சு''. வெறுப்போடு முணுமுணுத்தபடி நரம்பைத் தவிர்த்தி காப்பிலையைக்கிழித்தார் ஒருமுறை கடையில் சுருட்டுக்கேட்க அவன் காய்ந்த சுருட்டைக் கொடுத்தான். ''காஞ்சுபோச்சு தம்பி கோடா போட்டதா ஒண்டு தா!'' என்று திருப்பிக்கொடுத்தார். மேசைக்கு கீழே குனிந்த கடைக்காரன் மீண்டும் இந் தாங்க என்றான். வாங்கிப் பார்த்தார் மயில்வாகனம் அதே சுருட்டுத்தான் ஆனால் சூப்பப்பட்டிருந்தது. அதிலிருந்து அவர் கடையில் சுருட்டு வாங்குவதில்லை.

''அப்பா குடியுங்க! மழைக் குளிருக்கு ஆறிப்போமெண்டு ஆத்தாமல் கொண்டுவந்திருக்கிறன்'' என்றவாறு கோப்பியை அவரருகில் வைத்துவிட்டு நிமிர்ந்தாள் அவள்.

''பிள்ள நீ ஒருத்திதானே எண்டு என்னட்டை இருந்தது எல்லாத்தையும் தந்து நல்ல இடத்தில ஒரு உத்தியோகத்தனைதானே செய்துதந்தநான். வேண்டின சீதனமோ அவனோடை சேர்ந்த சகாக்களின்ர புத்திமதியோ பொடியன் கூடுதலாகக் குடிக்கப்பழகிற்றுது'. கொஞ்சம் கண்டித்து வை பிள்ளை' என்று நான் சொன்னதுக்கு நீ விவாகரத்து செய்து போட்டுவந்து நிக்கிறாய். மாதாமாதம் படிக்காசு முந்நூறு ரூவாயும் ஒருவருஷமாய் வாங்கினாய். அந்தப் பொடி இப்ப வெளியாலபோய் மாதம் மூவாயிரம் ரூவாயா மூண்டு வருஷமாக அனுப்புது. உன்னட்டை வாங்கின சீதனக் காசுக்கு மேலால் அனுப்பீற்றான். அருமையான பொடி''.

''நானும் அவரை நிரந்தரமாகப்பிரியவேணும் எண்டு அப்படிச்செய்யேல்லயப்பா. காசாக்குடுத்தது- நகையாகக் கொடுத்தது எல்லாத்தையும் அழிச்சுப்போட்டுக் காணியிலயும் கைவைக்க வந்தபோது தான் யோசிச்சுப்பாத்தன். குடிக்க, சாப்பிட, கோட்டு உத்தரவுப்படி. எனக்கு காசு தர அவருடைய சம்பளத்தில தான் எல்லாம் செய்யவேணும் என்றால் குடியைக் குறைப்பார். கட்டுமட்டாக நடப்பார். திருந்துவார் என்றுதான் அப்பிடிச் செய்தநான். விவாகரத்தை ரத்துசெய்வது பெரியகாரியமா?'' அவள் கண்கள் குளமாகின.

மகளை ஏதோ ஒரு மனநிறைவோடு நிமிர்ந்து பார்த்தார். மயில்வாகனம் ''என்னமோ.. செய்யம்மா'' என்று சொல்லிவிட்டு கிணற்றடிப்பக்கமாக எழுந்து போனார். அவர் நடையில் புதியதொரு மாற்றம் தெரிந்தது.

காலை மணி எட்டிருக்கும்.

பாமாவை பள்ளிக்கு அனுப்பிவிட்டு கையில் ஏதோ அலுவலாக இருந்தாள் நிர்மலா.

கேற்றுக்கு வெளியே—

சைக்கிள் மணி கேட்டது.

எட்டிப் பார்த்தபோது தபால்காரன் நிற்பது தெரிந்தது. விரைந்து சென்று கடிதத்தை வாங்கி விலாசத்தைப் பார்த்தாள்.

அது—

அவள் கணவன் நடராஜனின் கையெழுத்து. ஆவலோடும், பரபரப்போடும் கடிதத்தைப் பிரித்தாள்.

நிர்மலாவுக்கு;

நீ என்றுஎழுதமுடியவில்லை. காரணம் நீங்கள் யாரோ, நான் யாரோ. உங்களோடு நான் வாழ்ந்த காலங்கள் இரண்டரை வருஷம். உங்களையும் பாமாவையும் மறக்கும் முயற்சிக்காகவே நான் வெளிநாடு சென்றேன். ஆனால் பாமாவை மட்டும் என்னால் மறக்கமுடியவில்லை, செக்கச் சிவந்தமேனியும், சுருள்கேசமும் செவ்விதழ்களும், மழலைப் பேச்சும், உரித்துவைத்துஉங்களைப்போலவே, என் கண்களில் வளர்கிறாள். நேற்றுத்தான் இலங்கை வந்தேன். நாளை எனக்கு கதிர்காமத்தில் கல்யாணம். இன்றேபுறப்படுகிறோம். மாதாமாதம் உங்களுக்கு முந்நூறு அனுப்புப்படி ஒரு நிதிநிறுவனத்திடம் மூன்றுவருஷக் காசு கொடுத்து வைத்திருக்கிறேன். அதற்கு மேல் என்னால் தர இயலவில்லை. எனக்கென்று ஒரு குடும்பம் வரும்போது நான் கட்டுமட்டாகத்தானே வாழவேண்டும். வெளிநாடு போனதுமுதல் குடிப்பதில்லை. எங்கள் திருமணம் நான் பாரெய்னிலிருக்கும் போது சமீபத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. மாதாமாதம் பணம் உங்கள்வீடுதேடிவரும். அதுதானே உங்கள் குறிக்கோள்? இவ்வளவு பணத்தை அனுப்பினேன். கிடைத்தது என்று கூட ஒரு கடிதம் எழுதியிருக்கிக்கூடாதா? ஒருசனியன் தொலைந்ததே என்று மகிழ்ச்சியாக இருக்கும் உங்களுக்கு என நம்புகிறேன்.

—நடராஜன்

''அத்தான்!'' அவள் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து படுவேகமாக வந்தது அந்த வார்த்தை. சிலையாக நின்றாள். அவள் கண்கள் கலங்கவில்லை. உள்ளம் குமுறவில்லை.

அவள் சிந்தனையெல்லாம்—

'மிளகாய்' கன்றுகளுக்கு அடித்த மிச்ச மருந்தை அப்பா எங்கு வைத்தார்' என்பதிலேயே இருந்தது.

'பளிச்'சென ஒருமின்னல்-

மீண்டும் சிந்தித்தாள் நிர்மலா.

'தகப்பனுமில்லை. தானுமில்லை. தன் தந்தையுமோ இன்னும் சில நாட்கள். பாமாவின் கதி?'

''இன்று வருவீர்கள் நாளை வருவீர்கள் என்று நாட்களைக் கடத்தினேனே தவிர, உங்களுக்கு பதில் எழுதவேண்டும் என்ற எண்ணமே எனக்குவரவில்லை அத்தான், என்னை மன்னியுங்கள்''.

ஆனால் பாமா—

இனிமேல் இன்னொருவனை மட்டும் அப்பா என்று கூப்பிடமாட்டாள்'' அவள்வெளிப்படையாகவே சொல்லிக்கொண்டு சாமி அறையை நோக்கி நடந்தாள்.

''நம்பிக்கை எல்லாமே நடந்துவிடுகிறதில்ல''

தகப்பனின் சொற்கள் காதில் விழுகிறது.

அவளைப் பொறுத்தவரை அவள் இனி— தேனும் மணமும் மற்ற வாடாத ஒருபூவரசம்பூ.

(யாவும் கற்பனை)

---

ஒருவன்; உன்வயது பதினெட்டுத்தானே?

மற்றவன்: எப்பிடி கரெக்டா கண்டுபிடிச்சே?

ஒருவன்: ஒரு அரைலூசின் வயது 9 அதை வைத்துத் தான்.

★

கமலா: A.B.C.D எத்தனை எழுத்து?

விமலா: 26 எழுத்து

கமலா: இல்லை 4 எழுத்து

●


ஒருத்தி: உன் சணவர் என்ன வக்கீலா பஸ்ஸில் ஏறியவுடன்இ பி. கோ இ.பி.கோ என்றாரே.

மற்றவள்: இடம் பிடிச்சுக்கோ என்பதைச் சுருக்கிச் சொன்னார்.

—வாணிஸ்ரீ பரமசிவம்

---

# சிறுகதைப் போட்டியில் யாழ். இந்து முதலிடம்



அகில இலங்கைத் தமிழ்த் தினத்தையொட்டி யாழ் கல்வித் திணைக்களத்தினரால் நடாத்தப்பட்ட, உயர்தர மாணவர்களுக் கிடையேயான சிறுகதைப் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மாணவன் செல்வன் சி மகிந்தன் யாழ் மாவட்டத்திலேயே முதலாவது இடத்தைப் பெற்றுள்ளார்.

'ஈழநாடு' வாரமலர் சிறுவர் பகுதி எழுத்தாளரான செல்வன் மகிந்தன்கல்லூரி மாணவ முதல்வருமாவார். இவர் யாழ் இந்துக்கல்லூரி ஆசிரியரும் எழுத்தாளருமான வண்ணை சே. சிவராஜாவினதும் திருமதி விமலநாயகியினதும் சிரேஷ்ட புதல்வராவார்.

---

## உரிமை

மரங்களில் உயிர் இருக்கிறது என்பதற்காக
அவற்றை வெட்டாதீர் என
நான்—
சொல்லப் போவதில்லை.

இயற்கைக்கு அழகைக் கொடுப்பதற்காக
இலைகளைப் பறிக்காதீர் என
நான் —
கூறப் போவதில்லை.

மரங்களின் கைகள் கிளைகள் என்பதால்
அவற்றை ஒடிக்காதீர் என
நான் —

உரைக்கப்போவதில்லை...
எனக்கோர் குடிசை வேண்டும்.

ஆந்திரா மூலம்: செரபண்டராஜு

தமிழில்:

அளவை சி. சிறீஸ்கந்தராசா

## தொடர் நவீனம்




அலுவலகம் நடக்கும் நேரங்களில் 'கன்ரீன்' செயல்படக்கூடாது என முன்னர் சில விதிமுறைகளைக்கைக்கொண்டனர் ஆனல் பின்னர் இது கைவிடப்பட்டுவிட்டது. பழையபடி அந்த விதிமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டால் எவ்வளவு சிறப்பாக இருக்கும்! ஒரு அலுவலகம் குட்டிச்சுவராக அங்கிருக்கும் ஒரு 'கன்ரீன்' போதுமானது. அங்கு வந்து அலைந்து திரிந்துகொண்டிருக்கும் பொதுமக்களின் கருத்து.

'கன்ரீன்' கலகலப்பாக இருந்தது.

நேரம் காலை பத்துமணி.

ஜீப் சாரதிகள் தேநீர் அருந்திக்கொண்டிருந்தனர்.

''என்ன இரத்தினம் ஜீப்பிலை புது ஆட்களை எல்லாம் கொண்டுபோருய்...!''

—துரைராஜா கண்ணைச் சிமிட்டிக் கொண்டே கேட்டான்.

''புது ஆட்களோ ..?- இரத்தினம் தேநீர்க் கோப்பையை மேசைமேல் வைத்துவிட்டு வியப்புடன் துரைராஜாவை நோக்கினன்.

''என்னப்பா போன திங்கட்கிழமை உங்கடை பெரியவரோடை அந்தப்புது டிஓவையும் ஜீப்பிலை கொண்டுபோனுய்! இப்ப முழிக்கிருய்...!''

''ஓ.. அது... போறவழியிலை இறக்கிவிட்டேன் அதிலை என்ன கிடக்கு...?''

''மச்சான் உங்கடை பெரியவன் கண் வைச்சிட்டான்! பெட்டை துலைஞ்சாள்...!'' -துரைராஜாசிரித்தபடியேகூறினன்.

''உனக்கு மச்சான் எப்பவும் ஐமிச்சப்பார்வை தான்! அந்த மனுசன் நல்ல ஒரு முஸ்பாதிக்காறன்...! ஆனல் ஆபத்தில்லாத ஆள்...!''

''முசுப்பாத்தியும் பனம் பாத்தியும்...! நீ இருந்து பாரன்... அவன் உதிலை ஒரு மன்னன்...!''

''நீ நினைக்கிற மாதிரி இல்லை... அவர் எல்லாரோடையும் நல்லாய்ப் பழகுவார்! அதைவைச்சுக்கொண்டு இப்படிக் கதைக்கிறது கூடாது துரைராசா''!

''இரத்தினம் என்ரை ஊர்க்காரனைப் பற்றி எனக்குச் சொல்லுறியே? அவன் குடும்பத்திலை டைசிப்பிள்ளை. தான் நினைச்சதைச் செய்வான். இப்ப என்ன...! முந்தி வாசிற்றிலை படிக்கிற காலத்திலை ஊருக்கு வந்தானென்டால் அவனைப் பார்க்கவேண்டும்...! சும்மா மாம்பழம் மாதிரி இருப்பான்...! அரிவரியிலையோ.. முதலாம் வகுப்பிலையோ தெரியாது எங்கடை ஊர் சைவட்பள்ளிக்கூடத்திலை என்னேடு கூடப் படிச்சவன்! எட, படிச்சவன் எண்டு தெருவிலை வழியிலைகண்டு சிரிச்சால் சிரியான்! ஆனல் ஆரன் கூடப் படிச்ச பெட்டையளைக் கண்டால் மணித்தியாலக்கணக்கிலை நிண்டு கதைப்பானடா! இவன்ரை சேட்டையாலை அவள் ஒரு பெட்டை பட்டபாடு...! கடைசிலை தகப்பன் பொலிசிலை வேலைசெய்தபடியால் ஒருமாதிரி காசைக்காட்டிச் சடைஞ்சு போட்டாங்கள்...!''

''என்ன கறுமமோ... ஆனல் நானறிஞ்சமட்டிலை அவ்வளவு மோசமில்லை...''

''மச்சான் நீவேலைக்கு இப்ப எடுபட்டனி நான் இஞ்சை பழம்திண்டு கொட்டைபோட்டனன்...! உன்ரை பெரியவரைப்போலை கனபேரை நான் என்ரை சேவிசிலை கண்டிட்டன்! எனக்குச் சொல்லாதை...!''

''என்னமோ நீ சொல்லுருய் துரைராசா ஆனல் நான் நம்பமாட்டன்!''

''என்ன மச்சான் ஒரேமுசுப்பாத்தியாய் இருக்கு?''- பிளானிங் செக்ஷன் பியோன் கோபாலு அங்கு வந்தான்.

''மச்சான் இரத்தினம் ஒரு சிகரட் தாவன்...''

''கோபாலு பச்சைத் தண்ணியிலை பலகாரம் சுடாதே! காசைக்கொடுத்து சிகரட் வாங்கிக்குடி!

''சரி மச்சான் இல்லை எண்டால் விடு! அதுசரி என்ன ஒரே கதையாய் இருக்கு! என்ன சங்கதி?''- கோபாலு ஆவலுடன் கேட்டான்.

''எல்லாம் உங்கடை புது டிஓ மிஸ் சின்னத்தம்பியைப் பற்றித்தான்...!''-துரைராஜா கண்ணைச் சிமிட்டியபடி பதிலிறுத்தான்.

''ஏன் அவவுக்கென்ன...?''

''இல்லைக்கோபாலு போன திங்கட்கிழமை உங்கடை பெரியவன் ஜீப்பிலை பக்கத்திலை இருத்திக்கொண்டு போனுர்... அதைத்தான் சும்மா கதைக்கிறம்!''

## 4

''துரை அண்ணை பெட்டை பெரிய விஷயக்காறி! நேற்று ஏடி தன்ரை மேசைக்கு அவளுக்கு ரீகொண்டுவரச்சொல்லி நான் கொண்டுபோய்க்கொடுத்தனன்... வழக்கமாய் ஏடி அப்படி ஒருவருக்கும் செய்யமாட்டார்... அந்த மனுசன் கண் வைச்சிட்டார். இனித்தெரியும் தானே...!''-கோபாலுஅகோரமாய்ச்சிரித்தபடியே கூறினன்.

''பாத்தியே இரத்தினம் நான் சொல்ல நீ பெரிசாய்க் கோவிக்கிருய்! இப்பகேள்..!''

அன்று வழக்கத்தைவிட நேரத்துக்கு வந்துவிட்டாள் கலா.

அலங்காரம் மிகப்பிரமாதமாய் இருந்தது. ''என்ன மாதிரியடி இந்தச் செலக்ஷன் செய்யுருய்?''- அவளின் சேலையையும் அதற்கு 'மாட்ச்' ஆக அணிந்திருந்த பிளவுஸ் தலையில் செருகியிருந்த ஒற்றை மல்லிகை-இவைகளைப் பார்த்துவிட்டு மிஸிஸ் சிவசம்பு கேட்டாள்.

''என்ன செலக்ஷன்...?நான் சாதாரணமாய்த்தான் வந்திருக்கிறன்...! கலாவின் பதில் அலட்சியமாய் இருந்தது.

''நீயடி கொஞ்ச நாளாய் நல்லவடிவாய் வாருயடி! என்ன சங்கதி... ஏதும் விசேஷம் இருந்தால் எனக்கும் சொல்லு கலா!''

''ஒரு விசேஷமுமில்லை... நீ சும்மா வெருளாதை!''

''கலா எனக்கு நீ ஒளிக்க வேண்டாம்..! நான் கொஞ்ச நாளாகக் கவனிச்சுக்கொண்டு தான் வாறன்... ஏடியும் ஒரு மாதிரித்தான் உடுப்புகள்... நடப்புகள்... ஏதோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்...!''

''என்ன விசர்க்கதை இது...!'' கலாவின் குரலில் திடீர்க்கோபம்!

''கலா நீ கோபிக்காதையடி..! நானும் உன்னுடைய சிநேகிதிதானே! உன்ரை நன்மை தீமையிலை எனக்குப் பங்கில்லையா? ஏதோ நான் ஊகிச்சதை சொன்னன் அவ்வளவுதான்...!''

''நீ என்ன ஊகிச்சனி? அதை சொல்லு முதலில!''- ஆவல் கொப்பளித்தது கலாவின் கேள்வியில். மிஸிஸ் சிவசம்பு அதைக்கவனிக்கத்தவறவில்லை

''உன்ரை பேரைச்சொன்னவுடனை ஏடியின்ரை முகம்காட்டுற சந்தோஷமும், அவருடைய கதை எண்டால் நீ காட்டுற உற்சாகமும் எனக்குத்தெரியாது என்று நினைக்காதையடி கலா...! உம்...! பரவாயில்லை...''

கலா ஒன்றும் பேசவில்லை. இனம் புரியாத மௌனம் அங்கு நிலவியது.

''என்னகலா ஏன் பேசாமல் இருக்கிருய்?''

''நீ நினைக்கிறது சரிதானடி...! அவர் அவர் நல்ல வடிவு... என்னடி...!''

இதைச் சொல்லும்போது கலாவின் மாம்பழக் கன்னக் கதுப்புக்கள் மேலும் சிவந்தன. கண்கள் எதையோ சொல்லத் துடித்தன!

''உண்மையிலை ஏடி வடிவானவர்தான் கலா! வடிவு மட்டுமே. மனுசன்ரை தேகம் சந்தனக்கட்டை மாதிரி என்ன...!''

—மிஸிஸ் சிவசம்புவின் முகத்தில் ஆவலோடு கலந்த ஒரு லயிப்பு.

''கலா உண்மையை ஒழிக்காமல் சொல்லு.. நான் கேட்டது சரிதானே...?''

''ராஜேஸ்... எனக்கு... எனக்கு என்னத்தைச் சொல்லுறதெண்டு தெரியேல்லை! நான் அவரைக் காதலிக்கிறனடி...!''

—கலா தலையைக் குனிந்து கொண்டாள்.

''கலா...''

மிஸிஸ் சிவசம்பு கலாவின் தோளைத் தொட்டாள்.

கலா சாடையாக நிமிர்ந்து பார்த்தாள்.

''உனக்கு என் வாழ்த்துகள்...''.

கலாவின் மனம் நிறைந்திருந்தது.

(வளரும்)

## அப்பா சொன்ன உண்மை - கதை 3

சிவம் இன்றேல் சக்திஇல்லை சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவமும் சக்தியும் சேர்ந்த நிலையில் தான் அதன் உண்மையான ஆற்றல் வெளிப்படுகிறது என்றும் சிவமும் சக்தியும் சேர்ந்துதான் உலகத்தையும் பிரபஞ்சங்களையும் வழிநடத்துகிறது என்றும் எமது மூதாதையர்களில் மூத்தார்கள் கூறினர்கள். சமய நூல்களும் எடுத்தியம்பின அவர்களின் அறிவார்ந்த இக்கூற்றுக்குப் பல நூற்றாண்டுகளுக்குப் பின் வளர்ச்சி பெற்ற விஞ்ஞானத்திஞல் பல விஞ்ஞானிகள் உருவானர்கள். இந்த நூற்றாண்டுகளில் தான் விஞ்ஞானிகள் தமது முடிவுகளின்படி சக்தி (ENERGY) இரு வகைப்படும் என்று இயக்கப்பண்பு சக்தி (KINETIC ENERGY) இன்றி நிலைப்பண்புச் சக்தி (POTENTIAL ENERGY) தனித்தனியாக இயங்க முடியாது என்றும் இரண்டினதும் சேர்க்கையால் தான் உண்மையான சக்தி வெளிப்படுகிறது என்றும் கண்டுபிடித்துள்ளனர் நிலைப்பண்பு சக்தி ''சிவன்'' ஆனல் இயக்கப்பண்பு சக்தி ''சக்தி'' ஆக வேண்டும் இப்போது சொல்லுங்கள் சிவனையும் சக்தியையும் கண்டவர்கள் விஞ்ஞானிகள் இல்லையா?


— ஜனனி சபா புஷ்பநாதன்.

## பார்த்தசாரதிகளே காத்திடவேண்டும்

துட்டர் துரௌபதி துகிலை உரிகையில்
'கட்டுப்பட்ட' கணவர் ஐவரும்
பார்த்திருந்தாராம்! பார்த்தசாரதிதான்
ஆர்த்த சபையில் நின்றழும் அபலையின்
மானங்காத்தான்!
மற்று, அச்சபையிலே,
துட்டர் துரௌபதி துகிலை உரிகையில்
சிட்டர் பலபேர் இருந்தனர்; எனினும்
தட்டிக் கேட்டுத் தடுத்திடவில்லையே!
'நெட்டை மரங்களாய்' நின்றனர் என்றே
பாடினன் - அவரைச் சாடினன் பாரதி.
சிட்டர்கள் புண்ணிய சிரேட்டர்கள் ஆயினும்
'கட்டுப்பட்டவர்' ஆன காரணத்தால்.
துட்டரை அதட்டத்துணிந்திலர்
இன்றும்,
உண்மையின் துகிலை உரிகின்றனர்கள்!
மண்ணிலே 'மெய்'யைப் புதைக்கின்றனர்கள்!
'விண்ணிலே' பொய்யை விதைக்கிருர்கள்!
பட்டம் பதவியில் உள்ளவர் 'அவர்க்கு'க்
கட்டுப்பட்டனர், ஆன காரணத்தால்,
துட்டரை எதிர்க்கும் துணிவைக் கொண்டிலர்.
எட்டும் ஒன்றும் ஏழு' எனக் கூறினும்
பொறுப்பை உணர்ந்த அப்புண்ணியவானவர்
அறிக்கைகளுக்கு ஆமாப்போட்டு
மறுப்பின்றி 'வருமானம்' காப்பார்!
''மானங்காத்திடுங் கோ, விந்தா'' என
ஆர்த்த சபையில் நின்றழும் அபலையைப்
பார்த்தசாரதிகளே காத்திடல் வேண்டும்.

— சத்தியவரதன்.

கவிதை நாடகம்



# தருமத்தின் குரல்

காரை. செ. சுந்தரம்பிள்ளை

## காட்சி 4

(களம் I)

இடம்: அக்கிரனின் அந்தரங்க அறை

நேரம்; காலை

பாத்திரங்கள்: ஆதித்தூர் அரசன் அக்கிரன் மந்திரி I. மந்திரிII, மந்திரி III

மந்திரி: II

இலவச உணவுக் கென்றும்
ஏழைகள் நலனுக் கென்றும்
பலகோடி பொன்னை நீங்கள்
பாராமல் ஈவ தாயும்
தலையான மடங்கள்; அன்ன
சத்திரம் கட்டும் வேலை
பலநாளாய் நடக்கு தென்றும்
பறையினைச் சாற்ற வேண்டும்

ஆங்கொன்றும் ஈங்கொன்ருக
ஐந்தாறு கட்ட டங்கள்
பாங்காக அமைக்கும் வேலை
படாரெனத் தொடங்க வேண்டும்
நாங்களும் துரித மாக
நடக்குதா வேலை அன்றித்
தூங்குதா எனமேற் பார்வை
செய்வதாய் நடித்து நிற்போம்

வேலைகள் நடப்ப தாக
வெளிப்படக் காட்ட லன்றி
நூலள வேனும் செய்து
நொந்திடத் தேவை யில்லை
சாலவும் நாட்டு மக்கள்
தங்களைப் போற்று தற்கு
நாளெலாம் உபாயம் சொல்வோம்
நாம்உங்கள் அடிமை மன்ன

அக்கிரன்:

நல்லது அமைச்ச ரேஉன்
நயம்மிகு உபாயம் பற்றிச்
சொல்வதற் கொன்று மில்லை
துரிதமாய் செயலில் நீங்கள்
எல்லோரும் ஈடுபட்டால்
என்பழி தீரும் என்பேன்?

மந்திரி: I

அல்லல் வேறேது முண்டோ
அறைந்திட வேண்டும் மன்ன

அக்கிரன்:

மதுவினை அருந்தி நாளும்
மதியற்றுத் திரிவ தாயும்
நிதியினை விரயம் செய்து
நெறிபிறழ்ந் துழல்வதாயும்
கதியற்ற மக்கள் பற்றிக்
கவலை யொன்றில் லேனுகிப்
புதுப்புதுக் களிப்புத் தேடிப்
புகுவதாய் உரைக்கின் ருர்கள்

மந்திரி; II

மருந்தாக மதுவை நீங்கள்
மாந்தியே வருவ தாயும்
விருந்தாக அதனை உண்ணல்
விலத்தியே இருப்ப தாயும்
வருந்திடும் மகக ளுக்காய்
வரு தி நீசேவை செய்ய
இருந்திடும் போது; ஏன்தான்
இந்நிலை எனவு ரைப்போம்

மந்திரி: III

மன்னவா! இதற்கோர் திட்டம்
மனதிலே உண்டு; நீங்கள்
அன்னதை ஏற்பீ ரென்ருல்
அவமானம் போக்க லாகும்

அக்கிரன்:

என்னதான் கூறு கின்றீர்
இது சரியான தென்ருல்
சொன்ன வாறதனைச் செய்வோம்
துளியேனும் தயக்கம் வேண்டாம்

மந்திரி III

மதுவினை அருந்தல் தீது
மன்னவர் விரும்ப மாட்டார்
புதியதோர் சட்டம்; நீங்கள்
பொறுப்புடன் நடத்தல் வேண்டும்
இதனையார் மீறி ஞலும்
ஏறுவர் கழுவில் என்றே
விதிப்பம் ஓர்பணிப்பை மக்கள்
விருப்புடன் ஏற்றுக் கொள்வர்

அக்கிரன்:

மந்திரி யாரே என்னை
மதுவினை ஒதுக்க வைக்கும்
தந்திரம் தானே சொன்னீர்
சரியில்லா உபாயம் தந்தீர்
சிந்தனை அற்ற வார்த்தை;
சிறிதேனும் புத்தி யற்ற
மந்திநீ: உன்தன் சொல்லோ
மடையனுய் ஆக்கும் உண்மை

மந்திரி: III

அப்படி யல்ல வேந்தே
அரசனே சட்டம் போட்டால்
செப்புவர் மதுவை நீங்கள்
தீண்டுவ தில்லை என்றே;
ஒப்புடன் மறைவாய் நீங்கள்
உண்பதில் தவறே இல்லை
எப்படி எந்தன் திட்டம்
இதில் பிழைஎன்ன கண்டீர்

அக்கிரன்;

அப்பப்பா உனது மூளை
அபாரம்தான் இதனைப் பற்றித்
தப்பாக நினைத்து விட்டேன்
சமர்த்தன்நீ இதனை நாளை
செப்பிடு வண்ணம் சட்டம்
செய்குவேன்; உனக்கு ஏற்ற
ஒப்பான வரிசை கள்நான்
உவப்புடன் செய்வேன் வாழ்க

(சிறிதுநேரம் சிந்தனை செய்த பின்னர் மந்திரிமார்களை நோக்கி...)

அழகான பெண்க ளோடு
அடிக்கடி திரிவ தாக
இழக்கமாய்ப் பேசு கின்ருர்
இதற்கென்ன செய்தோம் சொல்க

மந்திரி: I

எழில்மிகும் அழகை யெல்லாம்
ரசித்திடும் வேந்தன் தூய
கலைஞன்; அக்கார ணத்தால்
காரிகை மார்க ளோடு

பழகினுன் வஞ்ச மின்றி;
பழிசொலல் தீது என்போம்
இளமையும் சிறப்பும்; நல்ல
இயற்கையில் விருப்பு முள்ளோன்
தெளிவுறச் சிந்தை செய்வோன்
சேயிழை மாரின் வாழ்வில்
ஒளிபெற வேண்டு மென்போன்
உத்தமன் என வுரைப்போம்

மந்திரி; II

அத்துடன் இன்னு மொன்றை
அரசே நாம்செய்தல் நன்று
எத்தகைப் பெண்ணென்ருலும்
இந்நாட்டில் காவ லின்றி
நித்தமும் திரிதல் தீது
நினைத்த வாறவர்கள் வாழ
ஒத்திட மாட்டோம் மன்னன்
ஒருப்படான் என வுரைடபோம்

கற்பினைப் பற்றி நாங்கள்
கண்டிப்பாய் பேச வேண்டும்
பொற்புள்ள பெண்க ளுக்குப்
புதுப்புதுப் பரிசில் ஈயக்
கொற்றவன் விழைவ தாகக்
கூறுவோம்; இதனைக் கேட்ட
மற்றவர் அரசன் தூய
மனத்தினன் என்ப ரன்ருே

(வளரும்)

# புதிய புத்தகம்

## 'தமிழ்ப்பேரன்பர் வித்துவான் க. வேந்தனர்

ஆசிரியர்: சொக்கன்

வெளியீடு; யாழ். இலக்கிய வட்டம், யாழ்ப்பாணம்.

விலை: ரூபா 15/-

சமீப காலமாக, நம் நாட்டின் தமிழ் எழுத்தாளர்களிடையே, கடந்த காலங்களை, வாழ்க்கைப் பாதைகளை, மனிதர்களைத் திரும்பிப் பார்க்கும் பண்பும், பழமை போற்றும் நிலையும் ஒன்றெனக் கலந்து எழுந்துள்ள ஆர்வம்வரலாற்று நியதிக்குட் பட்டதுதான். பேராசிரியர் துணைவேந்தர் சு. வித்தியானந்தன் அவர்களின் மணிவிழா வினையொட்டி மலர்ந்த மலர்களும், அன்னரின் வாழ்க்கைநூலும், இன்று பிரபல எழுத்தாளர் சொக்கன் அவர்களால்'தமிழ்ப்பேரன்பர் வித்துவான் க. வேந்தன்'என்ற நூலும் இதனைஆதாரத்துடன் நிரூபிக்கின்றன

வரலாறு என்பது ஒரு நாட்டையோ, பல நாட்டையோ அன்றி மனிதரையோ பாதிக்கும் கடந்தகால உண்மை தானே.

வித்துவான் க வேந்தனர் மறைந்து பதினெட்டு ஆண்டுகள் கழிந்த பின்னர் அவரைப் பற்றிய நூலொன்று எழுந்துள்ளது, பிரபல எழுத்தாளரும், கல்விமானுமாகிய 'சொக்கன்' அவர்களால் எழுதப்பட்ட இந்நூல் பலவழிகளிலும் சிறப்புடையது வேந்தனரின் வரலாற்றைக் கூறுவதால் ஒரு வரலாறு நூல்; அவர் வாழ்வையும் வாழ்க்கையையும் விமர்சனம் செய்வதால் ஒரு ஆய்வு நூல்; அவர் எழுத்துக்களில் தற்கால நிலைக்கு பொருத்தமானவற்றை உதாரணங்களாகக் கொண்டதில் ஒரு எழுச்சி நூல். இம்மூன்று நிலைச்சிறப்புக்களையும் இது கொண்டிலங்குகிறது. 'சமமானவர்களிடையேநிகழும் கருத்துப்பரிமாறலே விமர்சனம்' என்ற மேலைநாட்டு விமர்சனக் கோட்பாட்டிக்குச் சிறந்தஎடுத்துக்காட்டு இந்த நூல். ஆயினும் இது முற்றுமுழுதான ஆய்வு நூலுமன்று ஆய்வுரீதிப்பண்புகளைக் கொண்டு சாதாரண வாசகர்களும் வேந்தனரைப் புரிந்து கொள்ளும் வண்ணம் சொக்கன் அவர்கள் தன்னை ஓரளவு கட்டுப்படுத்தியுள்ளார்.

டாக்டர் உ. வே. சுவாமிநாதையர் அவர்களின் என் சரித்திரம்'என்னும் சுயசரிதை நூல் எவ்வாறு- அவர்காலப் பொருளாதார, சமூக, கல்வி வரலாற்றினைக் காட்டுகின்றதோ, அதேபோல இந்த நூலும் 1900-க்குப் பின்னுள்ள ஈழத்தமிழர் நிலையை எடுத்துக் காட்டுகிறது. (உதாரணம் பெரிதாக இருந்தாலும், நூலின் தன்மையை விளக்க எழுதவேண்டியதாயிற்று.

இந்த நூலில், வேந்தனர் காலத்துக் கல்விப்பணி வேந்தனரின் வாழ்க்கைப் பாதையில். புதுநூல் புனையும் புலவன், வேந்தனரின் 'காவிய'ங்கள், கட்டுரையாசிரியர் வேந்தனர், சித்தாந்த சிரோமணி வேந்தனர், செல்லும் சொல் வல்லார் வேந்தனர், உணர்வினில்வல்லார் வேந்தனர்என்ற- எட்டு அதிகாரப் பகுப்புக்கள் உள்ளன ஒவ்வொரு கட்டுரையும்தனித்துஆராயப்படவேண்டியவை. நூலின் சுவை மாதிரிக்கு ஒன்று.

முப்பத்தாறு ஆண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது... அ. மகாதேவா அவர்களை ஆதரித்து நடந்த கூட்டம் அது. ஐக்கியதேசியக் கட்சியின் வேட்பாளர் அவர்...கூட்

செம்பியன்செல்வன்

டத்தலைவர் திரு சீ. குமாரசுவாமி... அன்று இலங்கைத் தமிழரின் முடிசூடா மன்னராய் விளங்கிய திரு. ஜி ஜி பொன்னம்பலத்தின் தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள், தம் எதிரிகளின் கூட்டத்தைக் குழப்பத் தம் தனிப் பெருந்தலைவரைத் தோள்களில் தூக்கி வைத்தபடி மைதானத்தைச் சூருந்திருந்த தெருக்களில் பலத்த இரைச்சலோடும் 'ஜே' கோஷத்தோடும் பவனிவருகின்றனர்.

முன்னர் சூரபன்மன் முருகனைச் சுற்றித்தன் பரிவாரங்களுடன் மும்முறை வலம் வந்தான். இறுதியில் முருகனின் கைவேலால் அவன் என்ன கதியாஞன் என்று சைவப் பெருமக்களாகிய நீங்கள் யாவரும் நன்கறிவீர்கள். இங்கும் இப்பொழுதும் ஒரு சூரபன்மன் பவனி நடந்துகொண்டிருக்கிறது நாங்கள் குமாரசுவாமியின் தலைமையில் கூடி நிற்கிறேம். எம்மைச் சுற்றி வரும் சூரபன்மனின் கதையும் அன்றைய சூரபன்மனின் கதியேயாகும் ...? — என்ற ரீதியில் திரு சு. நடேசபிள்ளை நயமாகவும் குத்தலாகவும் பேசுகிருர் — மலைப்பிஞ்சுகள் மேடையை நோக்கிப் பறக்கின்றன.

வேந்தனர் அவர்கள் 1950ல் மக்கள் முன் வைத்த இலக்கி

(8 ம் பக்கம் பார்க்க)

## தர்மசாஸ்திர நீதிகள்

மில்க்வைற் வெளியீடு

தொகுத்து வெளியிட்டவர்

க. சி. குலரத்தினம்

காலத்துக்குக் காலம் சிந்தனைக்கும் வாழ்வுக்கும் பயனுள்ள அரிய சிறிய தொகுப்பு நூல்களை வெளியிட்டு இலவசமாக உதவி வரும் 'மில்க்வைற் அதிபர் சிவநெறிப்புரவலர் க கனகராசா அவர்களின் ஐம்பத்தேழாவது ஆண்டு நிறைவினையொட்டி 'தர்ம சாஸ்திர நீதிகள்' என்ற தொகுப்புநூல் வெளிவந்துள்ளது. இதனைத் தொகுத்து வெளியிட்டவர் தமிழும் சைவமும் நன்கறிந்த மூதறிஞர் க சி. குலரத்தினம் என்னும் பொழுதே நூலின் பண்பும் பயனும் நன்கு புலனுகும்.

தருமம் என்பது எல்லாரும் அறியக்கூடாத அரிய பண்டம். வாழ்க்கையைத் தருமத்தின் வழியில் இடுபவர் அரியராய் இருப்பதற்கு இதுவே காரணம். இன்றைய உலகில் தருமம் செல்லாக்காசாகி வருவதுகண்கூடு. எனினும் அதனை மீளவும் நினைவுறுத்தி அதன் வழியிலே ஒரு சிலரையாவது நடக்கச்செய்தல் நல்ல பணியாகும். இப்பணிக்குக் காலாகச் சிவநெறிப் புரவலரும், நூலாக்க நிமித்தகாரணரவாகத் திரு. க. சி குலரத்தினம் அவர்களும் விளங்குவது பாராட்டி அமையாது.

தருமசாஸ்திர நீதிகளாக 57 நீதிகள் இந்நூலிலே தரப்பட்டுள்ளன.

''அகதிகளாய் வருவோரை ஊரவரேயன்றி நாட்டின் அரசும் பொது நிதியிலிருந்து காப்பாற்றுதல் வேண்டும் அதிதிகள், அகதிகள், வேலைக்காரர், தாய்தந்தையர் எனவுள்ளவர்களுக்கு ஆதரவும் ஆகாரமும் கொடுத்தல் இல்லற தருமம்.''

என்பது ஒருபானை சோற்றுக்கு ஓர் அவிழ்பதமாகும்

நூலின் இறுதியில் சிவநெறிப்புரவலரின் 'ஆரோக்கிய இரகசியம்' ஒரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இதுவும் படிப்போர்க்கு நெறியும பயனும் தருவதே.

வெளியீட்டாளரையும், சிவநெறிப்புரவலரையும் பாராட்டுகிறேம்.

'சொக்கன்'

### 1985 பெப்ரவரியில் கூடும்

# ஐ.நா. மனித உரிமை குழுவில் இலங்கைச் சம்பவங்கள்!

**க. ஜீவகதாஸ்**

இலங்கையில் மனித உரிமைகள் கொடூரமாக மீறப்படுகின்றவிடயம் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகள் குழு ஆராய்ந்து நடவடிக்கை எடுத்தல்வேண்டும்'' என 1983ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஜெனீவாவில் கூடிய ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் குழு தீர்மானம் ஒன்றை எடுத்திருந்தது.

இந்த உபகுழுவில் 43 நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

அதேசமயம் 1983 பெப்ரவரி-மார்ச்சில் கூடிய மனித உரிமைகள் உப குழுவில் ''இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்ற விடயங்கள்தொடர்பாக,சர்வதேசஅரங்கில் மிகவும் மதிப்புப்பெற்ற சர்வதேசஸ்தாபனங்கள் அவ்வாறான செயல்கள், சம்பவங்கள் பற்றி பகிரங்கமாகக் கண்டனம் தெரிவித்தன — உலக அரங்கிலே இலங்கையிலுள்ள மனித உரிமைகள் பற்றிய தெளிவான நிலைப்பாட்டை நிலைநிறுத்தித் தெளிவாக்கின.

இருந்தபோதிலும் ஐக்கிய நாடுகள் சபையில் வழமையாக இருக்கின்ற உறவு முறைகளின் அடிப்படையிலும் மனித உரிமைகள் உப குழுவில் அங்கம் வகிக்கின்றவர்கள் அரசின்பிரதிநிதிகள் என்ற காரணத்தினாலும், இலங்கை அரசாங்கத்திற்கு மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற சில கடமைகளை வலியுறுத்தி இலங்கையிலுள்ள மனித உரிமைகள் மீறல்கள்பற்றித் தொடர்ந்தும் விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை'' எனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும், இவ்வருடம் செப்டம்பர் மாதம் 6ம்திகதி தொடக்கம் 30ம் திகதிவரையும் ஜெனீவாவில் கூடிய ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் உபகுழுவில்- இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுகின்ற விடயங்கள் தொடர்பாக மீண்டும் ஆராயப்படல்வேண்டும்'' என்ற கருத்தை வலியுறுத்தி இவ்வுபகுழுவின் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இவ்விடயத்தையும் சேர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறான முயற்சியின் பின்னணியில்-லண்டனிலுள்ள பல தமிழர் ஸ்தாபனங்களும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் முன்னின்று செயலாற்றின எனவும். இந்த ஸ்தாபனங்களின் சார்பாக பல்வேறுபட்ட பிரசுரங்களைத் தயாரித்து மனித உரிமைகள் உபகுழுவின் பிரதிநிதிகள் மத்தியில் நேரடியாக விநியோகஞ் செய்ததுடன், அவர்களுடன் தனித்தனியாகவும்- குழுவாகவும் வெளியே பேச்சுவார்த்தைகளும் நடாத்தப்பட்டன எனவும் தெரியவருகின்றது.

அதே சமயம் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் உயர் மட்ட அதிகாரிகள்- ''மனித உரிமைகள் உபகுழுவின் முன்னைய தீர்மானத்துக்கு மாறாக இன்னுமொரு தடவை இந்த விடயம்பற்றி ஆராய முடியாது'' என்ற விவாதத்தை மனித உரிமைகள் உபகுழுவிலும் தனிப்பட்ட முறையிலே வெளியாலும் நடத்தினர்.

மனித உரிமைகள் உலகின் பலநாடுகளில் மீறப்படுகின்றன என்ற விடயம் உபகுழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட உடனே அங்கு சமுகமளித்திருந்த இந்தியாவின் பிரதிநிதியான திரு பண்டார எம்பியும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்களைப் புள்ளி விபரங்களுடன் சுட்டிக்காட்டி இலங்கை அரசாங்கத்தின்மீது குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி அடுத்து நடைபெறவிருக்கின்ற மனித உரிமைகள் உபகுழுக் கூட்டத்தில் இலங்கை விடயம் தொடர்பாக ஆராயப்படல் வேண்டியது மிகவும் அவசியமாகும் ''என விவாதித்தார்,

இந்தியப் பிரதிநிதியின் விவாதத்தைத்தொடர்ந்து அங்கு பிரசன்னமாகி இருந்த சர்வதேச மதிப்புப் பெற்ற மனித உரிமைகள் ஸ்தாபனங்களும்- இலங்கையிலே நடைபெறுகின்ற மனித உரிமை மீறல்களைக் கண்டித்து உரையாற்றினார்கள். என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இறுதியில் 1985ம் ஆண்டு பெப்ரவரி மார்சு மாதத்தில் ஜெனிவாவில் நடைபெறஇருக்கின்ற மனித உரிமைகள் உபகுழுக்கூட்டத்தில்இலங்கையில் நடக்கின்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பான சம்பவங்களை ஆராயக்கூடிய வகையில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இக் குறித்த தீர்மானமானது- இலங்கையில் நடக்கின்ற மனித உரிமை மீறல்களைக் நேரடியாகக் கண்டிக்கின்ற தீர்மானமாக அமையாவிட்டாலும்கூட இலங்கையில் நடக்கின்ற மனிதஉரிமைமீறல் சம்பவங்களைப் பற்றி ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் உபகுழுவில் மீண்டுமொருதடவை விவாதிக்கின்ற சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான தீர்மானம் ஒன்றினை உபகுழுவில் நிறைவேற்றப்படுவதற்கு இந்தியப் பிரதிநிதிகள் இரவு பகலாக உழைத்திருக்கின்றனர் எனவும் அறி

(8 ம் பக்கம் பார்க்க)


பவர்ஸ் உரம்


அதிக விளைச்சலுக்கும் கூடிய இலாபத்துக்கும்

A B C

MASTERS ABC 4/82 (C)

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6


செல்லர் வீட்டில் என்றுமில்லாத ஒருவகை அமளி.

இதுவரை பேச்சுக்காலுடனேயே குழம்பிப்போன கலியாணப்பேச்சுக்கள் அன்று பெண்பார்க்க மாப்பிள்ளை வீட்டார் வருமளவிற்கு முன்னேறியிருந்தது.

கண்ணகியம்மன் கோவிலுக்குப்போய்விட்டு திரும்பிக் கொண்டிருந்த எஸ். எம். செல்லர் வீட்டின் முன்னால் நின்ற 'பேஜோ' காரைக்கண்டதும் நிலைகுலைந்து போனார்.

## 3

''செல்லர் வீட்டுப்படலையிலயும் இப்பிடிக் காருகள் நிக்குது '' வெறுப்புடன் முணுமுணுத்துக்கொண்டே, வந்தது யார் என அறியும் ஆவலில் படலையைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார்.

அழகுப் பதுமைபோல ஷர்மிளி கதிரை ஒன்றில் அமர்ந்திருந்த போதிலும் அவள் முகத்தில் ஏதோ ஒன்று குறையாகப்பட்டது. செல்லர் ஓடி ஓடி வந்தவர்களை உபசரித்துக் கொண்டிருந்தார்.

''ஓ... கந்தையரே வாரும்... நீர் வந்ததும் நல்லதாப் போச்சு..''

அங்கே வந்திருந்தவர்களை அறிமுகஞ் செய்துவைத்தார் செல்லையர்.

பிறகு என்ன.. சொல்லவா வேண்டும் வந்திருந்தவர்களுடன் அந்நியோன்நியமாகி விட்டார் அவர். அவர்களின் விலாசத்தை எப்படியும் புடுங்கிவிடவேண்டும் என்பதிலேயே கண்ணுயிருந்தார்.

தன்ர மகளுக்கு 'போமன்' ஒருத்தரையே கட்டிவைச்சிற்று ஊருக்கு என்சினியர் என்று அவிட்டுவிட்ட கந்தையர். செல்லரின் வீட்டுக்கு என்சினியர் ஒருத்தன் மாப்பிள்ளையாக வர விடுவாரா என்ன.

''கந்தையர்... தம்பி போன கிழமைதான் லண்டனால வந்தவர் சுண்டிக்குழிதான் சொந்த இடம். ஆனா அவருக்கு கிராமபுறத்திலதான் செய்ய விருப்பமாம். அப்பதான் ஒழுக்கமான பிள்ளையள் கிடைக்குமெண்டு வீட்டில சொல்லிப்போட்டாராம்...''

சொல்லி முடித்துவிட்டு பெருமையுடன் செல்லர், மாப்பிள்ளையைப்பார்த்தார்.

''தம்பிக்கு... அப்ப என்ரை மகனைத் தெரிஞ்சிருக்கும்... உலகநாதன் எண்டு லண்டன் எஸ்டபிள்யூ எட்டில இருக்கிறார்...''.

''உலகன்ரை பாதரே நீங்கள்...'' சிரித்துக்கொண்டே எழும்பிவந்து கந்தையருக்கு அருகில் அமர்ந்துகொண்டார் மாப்பிள்ளை.

கந்தையருக்கு நாவில் தேன் வார்த்தது போலிருந்தது.

இந்தச் சம்மந்தத்தையும் எப்படியும் குழப்பிவிடலாம் என்பதில் அவருக்கு இப்போது நம்பிக்கை ஏற்பட்டுவிட்டது.

''அங்கிள். நானும் இவயட்ட உங்களைப்பற்றி விசாரிக்கவேணும் எண்டுதான் நினைச்சுக்கொண்டிருந்தனான்... நீங்களாயே வந்திட்டியள்... கிட்டத்தானே வீடு...''

நெருக்கமாகி விட்டதை உணர்ந்துவிட்ட கந்தையருக்கு இருப்புக்கொள்வில்லை.

''ஓம் ராசா... முன் வீடுதான்'' என்றார்.

''அப்ப நல்லதாப் போச்சு... போகேக்கை போயிற்றுப் போகலாம்''.

''அப்ப நீங்க இருந்து உங்கடகதையளையெல்லாம் கதைச்சிற்று வாங்க, நான் அங்கை போய் பாத்துக்கொண்டு நிக்கிறன்'' என்றவாறு எழும்பினார் கந்தையர்.

''ஏன் அண்ணை நீங்களும் நிண்டா என்ன...''இழுத்தார் செல்லர்.

கந்தையரைக் கையுக்குள் போட்டால்எப்படியும் இதைச் சரிக்கட்டிவிடலாம் என்பது அவரது நம்பிக்கையாகிவிட்டது.

''இனியென்னத்தைப் பேசுறது... தம்பிக்கு புள்ளையைப் பிடிச்சிருக்கும்தானே... இனி நீங்கள் குடுக்கிறதைக் குடுத்து வாங்கிறதைவாங்கிக்கொண்டு செய்யிறதுதானே...''

சொல்லிக்கொண்டே புறப்பட்ட கந்தையரை நோக்கி ஓடிவந்தார் செல்லர்.

''அண்ணை... உங்களுக்கு அறிஞ்ச ஆக்களாப்போனது நல்லதாப்போச்சு.. நீங்க எப்பிடியும் இதை ஒப்பேத்திப் போடவேனும்''.

கந்தையரை தூரத்துக்கு அழைத்துச்

### குறுநாவல்

சென்று குசுகுசுத்தார் செல்லர்.

''நீர் ஒண்டுக்கும் யோசியாதையும் காணும்... சொல்லித்தானே விடுவன்...''

கலியாணமே நடந்துமுடிந்துவிட்டது போலிருந்தது செல்லருக்கு.

கந்தையர் போனகையுடன் மாப்பிள்ளை வீட்டாரும் புறப்பட்டனர். ஒரு வாரத்தில் முடிவுசொல்வதாகவும் அதன் பின்னர் சீதனப் பேச்சுக்களை பேசலாமென்றும் முடிவானது.

(8 ம் பக்கம் பார்க்க)

## தமிழ்தந்த தாதாக்கள்

# நினைவாற்றலுக்கு ஒரு இருபாலைச் சேனதிராச முதலியார்

**க.சி.குலரத்தினம்**

திருக்கைலாய பரம்பரைக் கூழங்கைத் தம்பிரான் சுவாமிகளிடம் ஆகமசாஸ்திரங்கள் அமைவுறக்கற்ற விற்பத்திமான்களுள் இருபாலைக் சேனதிராச முதலியாரும் ஒருவர். நினைவாற்றலுக்குப் பெயர் பெற்ற நெல்லைநாதமுதலியாரின் இளைய மைந்தராக 1750 ஆம் ஆண்டளவில் தோன்றியவர் சேனதிராசர். அவருக்கு முந்திப்பிறந்த அண்ணன் கந்தப்ப முதலியார் என்ப.

சேனதிராய முதலியாரின் தோற்றத்தை பெரும் பேறுகக் கருதிப் புகழ் மாலை பாடிய புலவர் ஒருவர் ''நெல்லைநாதக்குரிசில் செய்தவமெனவுதித்த சேனதிராச கலைஞானதிராசன்'' எனப்பாடுவார்'' இருபாலை அரசறிந்த பேரூர். அது குளத்தங்கரை நாகரிகத்தில் முன்னணியில் நிலவிய பெருமைவாய்ந்தது அங்கே கலியாணக் குளம், பெரிய குளம்' பண்டாரக் குளம். கட்டைப்பிராய்க் குளம், உச்சுவிற்குளம், வேளைக் குளம், அம்மன் குளம் முதலிய பல குளங்கள் பண்டைக்காலத்தில் வளங் கொடுத்தன. நல்லூர் அரசரின் இராசபாதை இருபாலையில் தொடுகிறது.

இருபாலையில் அரசறிந்த பெருங்குடி முதலிமார்கள் தலைமுறை தலைமுறையாகச் சைவத் தமிழ் வளர்த்தவர்கள் அந்தமரபில் வல்வெட்டி, உடுப்பிட்டி ஊர்களின் தொடர்பில் வந்த அருளம்பல முதலியார் 1700ஆம்ஆண்டில் ஒல்லாந்த அதிகாரிகளின் எழுத்து வேலைகளில் முதலியார் வேலை பார்த்து வந்தவர். இவரின் முன்னோர் வம்சாவழியும் மதிப்பு வாய்ந்தது. இவர்கள் பொன்னம்பல முதலி, எதிர் வன்னியசிங்க முதலி, நெல்லைநாதமுதலிஎன்பாரவர்.

### நினைவாற்றல்மிக்க நெல்லைநாத முதலியார்

நெல்லைநாதமுதலியார் நினைவாற்றல் மிக்கபுலவர் எதனையும் எத்துணை பெரிதாயினும் ஒருமுறைகேட்டால் நெஞ்சிற் பதித்து, உடனடியாக அட்சரம் தவருமல் ஒப்பிக்கவல்லவர். ஏகசந்தக்கிராகி என்பது புகழ்பூத்தபட்டம். இத்தகைய பெரியவர் முன்னர் சகலாகம பண்டிதராயிருந்த அருணந்தி சிவாசாரியார், மெய்கண்டாரிடம் ஆகமப்பொருள்கேட்ட அமைவில், கூழங்கைத் தம்பிரானிடம் அடக்கஒடுக்கமாக அமர்ந்திருந்து ஆகமப்பொருளையமைவாகக் கேட்டறிந்தவர்'

கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் நெல்லைநாதமுதலியாருக்குக் காட்டிய கருணையையும் கௌரவத்தையும் கவனித்த வைத்திலிங்கம் செட்டியார், தமது மாளிகையில் நெல்லைநாத முதலியாருக்கு ஆஸ்தானபீடம் அலங்கரிக்குமாறு அளித்திருந்தார்.

வைத்திலிங்கச் செட்டியார் புலவர்களுக்கு வரிசையறிந்து வழங்குகிருர் எனக் கேட்டறிந்து வடதேசத்துப் புலவர் செந்திக்கவி என்பார் சுடச்சுட நல்லதொரு பிரபந்தம் பாடிக்கொண்டு தலையை நிமிர்த்தியவாறு செட்டியார் மாளிகையுள் புகுந்தார். அவருக்கு நல்ல வரவேற்புக் கிடைத்தது. கொண்டுவந்த கவிதை அரங்கேற்றிப் பரிசு பெறுவதற்கு ஒழுங்குகள் நடைபெற்றன வித்துவான்கள், புலவர்கள், பண்டிதர்கள் வந்து கூடிக் கொலுவிருந்தார்கள். செந்திக்கவிதம் பாடல்களை அருமையாகப் படித்துப் பொருள் விளக்கிவந்தார். புலவர்கள் தலையசைத்து வந்தார்கள். பாடல்களை உன்னிப்பாகக்கேட்டு உளம் நெகிழ்ந்த செட்டியார், புன்முறுவல் தவள நெல்லைநாத முதலியாரை நோக்கி ''பாடல்கள் எப்படி?'' என்று கேட்டார். உடனே முதலியார் ''அருமையான பாடல்கள் ஆனல் அத்தனையும் பழம் பாடல்கள்'' என்ருர். பாடுபட்டுப் பாவிசைத்து வந்த செந்திக்கவி பதைபதைத்து, ''புலவரே! என் பாடல்கள் பழையன என நீர் கூறுவீராயின் எங்கே அவற்றிலொன்றைச் சொல்லிக் காட்டுவீராக,' என்று துடித்தெழுந்தார். முதலியார் வெகு சாந்தமாக புன்முறுவல் பூத்த முகத்தோடு, ஒருபாடல் அல்ல. அத்தனை பாடல்களையுமே ஒப்பிக்கிறேன் கேளுங்கள்'' என்று கூறி மடமடவென்று திருப்பிச் சொன்னர்.

செந்திக்கவி என்னசெய்வதென்று ஏங்கியிருந்தார் கொலுவிருந்த புலவர்கள் அங்காந்த வாயோடு அசையாதிருந்தார்கள் செட்டியார் கருணை ததும்பும் முகத்தோடு முதலியாரைப் பார்த்தார். முதலியார் சிரித்தார். செந்திக்கவி தன் இறுமாப்பை உணர்ந்தார். முதலியாரைப் பணிந்தார். செட்டியயார் இரண்டு தாம்பாளங்களில் சன்மானம் வைத்து ஒன்றை முதலியாருக்கும் ஒன்றைச் செந்திக் கவிக்கும் கொடுத்தார் முதலியார் தமது பரிசையும் செந்திக் கவியிடம்கொடுக்குமாறு செட்டியாரிடம் விண்ணிப்பித்தார். இரட்டைப் பரிசுபெற்ற செந்திக்கவி நெல்லைநாத முதலியாரின் நினைவாற்றலை வியந்து போற்றிப்பணிந்தார்,

### புலமையோடு பிறந்த சேனதிராசர்

நினைவாற்றல்மிக்க நெல்லைநாத முதலியாரின் மைந்தர் சேனதிராசர் புலமையோடும் நினைவாற்றலோடும் பிறந்தவர். அவர் இளமையில் தந்தையாரிடத்து ஓரளவு பயின்றபின் அக்காலத்தில் மாதகலில் புகழ்பூத்து விளங்கிய மயில்வாகனப் புலவரின் தாய்மாமன் சிற்றம்பலம் என்பாரிடத்தும் சிறப்பாகப் பயின்றவர். சிற்றம்பலப்புலவர் தமிழ்நாட்டில் படிப்புக்காகப் பதினேழு ஆண்டுகள் தங்கி அங்கே பஞ்சலக்கண கணபதிஐயரிடம் படித்து முறுக்கேறி மீண்டவர்.

இளமையிலேயே விவேகமும் நினைவாற்றலும் விடாமுயற்சியும் ஏவல்செய்யச் சேனதிராச முதலியார் அக்காலத்தில் தமக்குக்கிடைத்த வசதிகளைப் பயன்படுத்தி போர்த்துக்கேயம், ஒல்லாந்தம், ஆங்கிலம் முதலிய மொழிகளை நன்ருக அறிந்தார். இப்பால் தாய்மொழியிலும் வடமொழியிலும் தமக்கு நிகரில்லாத தன்மையில் பெரும் புலவராயினர். பன்மொழிப் புலவராய சேனதிராச முதலியாரின் அறிவாற்றல்களை அறிந்த ஆங்கில அரசாங்கம் நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பு முதலி உத்தியோகத்தை வற்புறுத்தி வழங்கியது.

சேனதிராச முதலியார் தமக்குக்கிடைத்த ஓய்வுநேரங்களில் சட்டம் பயின்று, பெரியவர்களிடம் பழகிச் சட்டத்தரணியானர். அவருடைய ஆற்றலை அறிந்த அரசாங்கம் அவருக்கு நீதிபதி உத்தியோகத்தையும் கொடுத்தது. பரம்பரைப் பெருமையும் உத்தியோக மேன்மையும் பன்மொழிப் புலமையும் சேனதிராயரைக் குழந்தையுள்ளம் கொண்ட நல்லமனிதனக நடக்கச்செய்தன.

### ஆகம அறிவு முறுக்கேறியமை

சேனதிராச முதலியாரின் தந்தையார் நெல்லைநாத முதலியார் மாதகல் மயில்வாகனப் புலவர் முதலானோர் முன்னரி திருக்கைலாய பரம்பரைக் கூழங்கைத்தம்பிரான் சுவாமிகளிடம் சைவக் கல்வி கற்றவர்கள். அந்தவகையில் தம்மைந்தனும் கற்கவேண்டும் என நெல்லைநாத முதலியார் விரும்பினராக மைந்தன் சேனதிராசர் கூழங்கைத் தம்பிரானிடம் சென்ருர்.

கூழங்கைத்தம்பிரான் அரியாலைச்சித்திவிநாயகர் ஆலயத்திற்கருகில் ஆச்சிரமத்துறைந்து அருங்கலைகள் ஆகமங்கள் பயிற்றிவந்த காலத்தில் பவணந்தி முனிவரின் நன்னூலுக்கு ஒரு சிறப்புரை எழுதிவந்தார் அவர் நன்னூலுக்குச் சிறப்புரைஎழு ஆரம்பித்த வேளையில் வந்த சேனதிராசர் பெருந்தொகையான பணத்தைக் காணிக்கையாகக் கொடுத்து நாற்பது நாள்களில் நன்னூலில் ஆழமான அற்புத அறிவைத்தேடிக் கொண்டார்.

சேனதிராச முதலியாரின் தமிழ்ப்புலமைக்கு நிகரான புலமை அவர் காலத்தில் எவரிடத்தும் காணப்படவில்லை என்னும் கருத்தில் புலவர்கள் பலர் அவரைப் புகழ்ந்து பாடியுள்ளார்கள். ''அருந்தமிழ்க் கவிஞனும் ஆனவியநிகைச் சேனதி முதலியும்'' என்றும் ''காழ்படு கடுமையிற் கற்று நிறைந்த திடமுறு நுண்மதிச் சேனதிராச முதலி'' என்றும் ''நானு திராவிடமும் நல்லிலக்கணுறுறச்செய் சேனதிராயன்'' என்றும் இன்னும் இங்ஙனம் பலவாருகவும் பாடியுள்ளனர்.

### குருகுலந் தாபித்த பெருமை

சேனதிராசா முதலியார் நல்லூர் முருகப்பெருமானையே தமது குலதெய்வமும் வழிபடு கடவுளாகவும் கொண்டு வணங்கிவந்தவர். அவர் நல்லூரை மையாமாகக் காண்டு பெருமளவில் சைவப்பணி புரிவதற்கு வழிவகுத்தவர். நல்லூரைத்தினமும் காலையிலும் மாலையிலும் வணங்குவதற்கு உறுதியாகக் கோயிலுக்கு அண்மையில் வாழ்ந்ததோடு தமது மனையில் பழைய காலத்து முறையில் குருகுலக்கல்வி கற்பிக்கவும் வழிகோலியவர்

அந்தவழியில் உருவான தலைமாணக்கன் நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களாவர் சேனதிராச முதலியாரிடத்து முறையாகக்கற்று உருவானவர்கள் வரிசையில் கோப்பாய் அம்பலவாண பண்டிதர், காரைநகர் கார்த்திகேய ஐயர், நல்லூர் கார்த்திகேய ஐயர், நல்லூர் சம்பந்தப் புலவர், நல்லூர் மனப்புலி முதலியார், நீர்வேலி பீதாம்பரப் புலவர், கந்தரோடை நாகநாத பண்டிதர், வல்வெட்டித்துறைஏகாம்பரப் புலவர், வட்டுக்கோட்டை சண்முகச் சட்டம்பியார், மறவன்புலம் சயம்பு உபாத்தியார் முதலானேரும் இன்னும் பலருமாவர்.

கூழங்கைத் தம்பிரான் சுவாமிகள் மறுமலர்ச்சி ஒளிவிளக்காகக் கொளுத்திய அறிவுச் சுடர் சேனதிராசா முதலியார் மூலம் யாழ்ப்பாண தேசமெங்

(10ம் பக்கம் பார்க்க)

---

## ஐ. நா. மனித

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யப்படுகின்றது. இந்தியப்பிரதிநிதிகளின் இந்த முயற்சிக்குப் பக்கத்துணையாக ஒருமேற்கு ஐரோப்பிய நாட்டின் உறுப்பினரும் உதவி புரிந்துள்ளார் எனவும் நம்பப்படுகின்றது. அதே சமயத்தில் மனித உரிமைகள் உப குழுவில் இக் குறித்த தீர்மானத்தினை நிராகரிக்கச் செய்யும் பொருட்டு இலங்கைப்பிரதிநிதிகள்முயற்சி செய்திருந்த போதிலும் கூட அடுத்த மனித உரிமைகள் உபகுழுக்கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைமீறல்கள் சம்பவங்களை விவாதிக்கவேண்டும் என்பதற்கு ஆதரவாக இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு கனடா உட்பட பதினெரு நாடுகள் ஆதரவாகவும், சீன, எத்தியோப்பியா, ரூமேனியா ஆகிய மூன்று நாடுகளும் எதிராகவும் வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஏழு நாடுகளின் பிரதிநிகள் வாக்கெடுப்பில் பங்குபற்றவில்லை. அத்துடன் பிரிட்டன் இத்தீர்மானம் தொடர்பான வாக்கெடுப்பில் நடு நிலைமை வகித்திருக்கின்றது எனவும் தெரியவந்துள்ளது.

## புதிய புத்தகம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

யம் பற்றிய புரட்சிக் கருத்துக்கள்— இன்று யார் யாரையோ இலக்கியப்புரட்சி மூலவேர்என்று கொள்வோர்களுக்கு புதிய விழிப்பை ஏற்படுத்துவன.

1. இலக்கியம் தற்பொழுது சில பண்டிதர்களுக்கு உரித்தாகிவிட்டது

2. பாரதி பாடலே சிறந்த இலக்கியம்.

3. கடுமையான செந்தமிழில் எழுதுவதை விடுத்து இலகுவான தமிழில் பேச்சுத் தமிழில் எழுதவேண்டும்

4, கோவை, அந்தாதி, உலா—முதலிய கடினமான இலக்கியவகைகள் தேவையில்லை.

இந்த நூலில் கவிஞர் மகன் வே இளங்கோ எழுதியிருக்கும் „அறிமுகஉரை" குறிப்பிட்டுச் சொல்லப்படவேண்டியதொன்று.

சொக்கன், வேந்தனர் என்னும் பலமான இரு துடுப்புக்களில் நகரும் இலக்கியப் படகு இந்நூல் என்ருல் மிகையில்லை,

## குறுநாவல்

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கந்தையர் வீட்டுக்கேற்வரை எல்லோரையும் கொண்டு வந்து விட்டுவிட்டுத் திரும்பினர் செல்லர்.

செல்லர் வீட்டில் இருந்த அமளியை விட இரண்டுமடங்காக கந்தையர்வீடு அல்லோல கல்லோலப்பட்டுக் கொண்டிருந்தது.

லண்டனிலிருக்கும் தனது மகனே நேரில் வந்துவிட்டது போல குதூகலத்துடன் காணப்பட்டார் அவர்.

வழக்கமான சம்பிரதாயக் கதைகள் முடிந்தபின்னர் ''எப்ப நாள் வச்சிருக்கிறியள்...'' என்ருர் செல்லர்.

''என்ன அங்கிள்... யாழ்ப்பாணத்தில பெரிய பெரிய இடங்களில எல்லாம் பேசி வரேக்க நான் விரும்பாததற்குக் காரணமே அங்க ஒழுக்கமான பிள்ளையள் இருக்காதெண்டசந்தேகம்தான். கிராமத்துப் பிள்ளையள் ஒழுங்கா இருக்கும் எண்டு நம்பினலும் முன் வீட்டில எனக்கு அறிஞ்சவங்க இருக்கேக்க அவயட்டக் கேக்காம முடிவு சொல்ல ஏலுமே...''

பையனின் கதையைக் கேட்டதும் கந்தையருக்கு உள்ளம் உருகியது. ''அட இப்படியொரு நல்ல பிள்ளையைச் செய்யுறதுக்கு தனக்கு இன்னுமொரு மகள் இல்லாமல் போய்விட்டதே'' என்று உள்ளூர வேதனைப்பட்டார்

'என்ன அங்கிள் போசாம இருக்கிறியள்... சொல்லுங்களன்''

''என்னத்தத்தம்பி சொல்லுறது...நீதான் என்ர வாயை அடைச்சுப் போட்டியே..'' என்றவாறு அக்கம்பக்கம் பார்த்தார். மாப்பிள்ளையுடன் வந்தவர்களைத் தவிர வேறு யாருமே இருக்கவில்லை. கந்தையரின் மனைவி அன்னம்மாவும் தேநீர் தயாரிக்க குசினிக்குச் சென்றுவிட்டாள்.

''எதுக்கும் தம்பி.. பிறகு நீங்க ஒருக்காத் தனியாவாங்களன் ஆறுதலாப்பேசலாம்''

கந்தையரின் பேச்சில் ஏதோ ஒரு 'தொய்வு' இருப்பதைக் கண்டதும் மாப்பிள்ளை உசாராகிவிட்டார்.

அவரைத் தனியே அழைத்துச்சென்றபோது விசயத்தைக் கக்கினர். திருமணப்பேச்சை அத்துடன் முடித்துக்கொண்டு அவர்கள் புறப்பட்டு விட்டனர்.

கந்தையர் நிம்மதியாக மூச்சுவிட்டவாறு''பரந்தாமன் அதிஷ்டக்காரன் தான் போல...'' என்றுமுணுமுணுத்துக்கொண்டார்.

செல்லர் கலியாண ஏற்பாடுகளில் மும்மரமானர். ஆனல் ஊரில் எவருக்கும் இந்தக்கதை போகக்கூடாதென்பதில் கண்ணுங்கருத்துமாக இருந்தார். பரந்தாமனுக்கு விடயம்போய் விடுமே என்பதற்காக.

''எல்லாம் நான் வடிவாச் சொல்லிவிட்டிருக்கிறன். ஆன இவன் சிற்றம்பலத்தின்ர பொடிக்கு மட்டும் விசயத்தை தெரியப் பண்ணிப் போடாதே..'' என்று கந்தையர்தான் செல்லருக்கு ஆலோசனை தெரிவித்திருந்தார்.

ஆனல் கந்தையரே இந்த விடயத்தை பரந்தாமனுக்குச் சொல்லிவிடவேணடும் என்பதற்காக துடித்துகொண்டிருந்தார்.

பரந்தாமனிடம் அவர் விடயத்தைக் கூறியபோது அவன் துடித்துப்போனன்.

''ஏன் 'எஸ் எம்' அந்தக் கதையை மாப்பிள்ளைக்குச் சொன்னனீங்கள்...''

''உனக்குச் சேரவேண்டியதை அவனுக்குக் கிடைக்கவிட ஏலுமேடாப்பா..''

''அவ விரும்பித்தானே கலியாணத்துக்கு சம்மதிச்சிற்று அதுக்குப்பிறகு எப்படி எனக்கு சேரவேண்டியது எண்டு..'' பரந்தாமன் சொல்லிக்கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட கந்தையர், ஷர்மினி செல்லரின் கட்டாயத்தினல்தான் சம்மதித்திருக்கிருள் என்றவிடயத்தையும் கூறினர்.

''தம்பி ... அண்டைக்கு பொம்பிளை பாக்க வந்தபோது அவளின்ர முகத்தில தெரிஞ்ச சோகம் ... உனக்கெங்க தெரியப்போகுது''

பரந்தாமனுக்கு அழுகையே வந்துவிடும்போல இருந்தது.

இனியும்தான் இப்படியே பார்த்துக்கொண்டிருக்க முடியாது என்ற தீர்மானம்தான் அவனுக்கு ஏற்பட்டது.

(வளரும்)

# இந்திராவை வெறுக்க வைத்த மருமகள் மேனகா!



சஞ்சே

## சஞ்சே அணிவித்த மோதிரத்தை கழற்றி எறிந்தார்!

துப்பாக்கிக் குண்டுகள் குரூரமாகத் துளைத்துக்கொலையுண்ட மாபெரும் தலைவி இந்திரா காந்தி தனது வாழ்வில் பயங்கரமான அரசியல்பிரச்னைகளையெல்லாம் சமாளித்திருக்கிறார்!

ஆனால்,

தன் இளையமகன் சஞ்சயின் மனைவியை, அதாவது தன் சீக்கிய மருமகள் மேனகாவின் போக்கினால் பெருத்த மனக்கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்!

மனதுக்குள்ளேயே அவற்றை வைத்து வெந்திருக்கிறார்!

''மேனகா இப்போது என்னவெல்லாமோ சொல்கிறார்! பதில் பேசாமல் நான் இருப்பதற்குக் காரணம் குடும்பக் கௌரவமும் பண்பாடும்தான்! எத்தனை நாளைக்குப் பொறுத்துக் கொண்டிருப்பது? என் மகனை மணந்ததற்குக் காரணமே அரசியல் பிரவேச ஆசைதான்!'' என்று இறப்பதற்குச் சில நாட்களுக்குமுன், இந்திரா பத்திரிகையாளர் ஒருவரிடம் சொல்லி வேதனைப் பட்டார்.

''அரசியல் பதவியே அவளது நோக்கம். எனது மகன் உயிருடன் இருந்தபோது, மேனகாவும், அவள் குடும்பத்தினரும் அவனின் பெயரைப் பெருமளவு பயன்படுத்தினர்கள்! அவளால் சஞ்சய்நிம்மதி, மகிழ்ச்சி என்பவற்றையெல்லாம் இழந்திருந்தான்!'' என்றுகூட இந்திரா வேதனையுடன் கூறியிருக்கிறார்.

சஞ்சய் இறந்தபின், மாமியார் வீட்டில் குடியிருந்த மேனகா தன் மகன் வருணை அழைத்துக்கொண்டு வெளியேறினரல்லவா?

இந்திராவுக்குத் தன் பேரன் மீது உயிர்!

எப்படியாவது தன் பேரனுடன் கொஞ்சி மகிழவேண்டுமென்ற ஆசையில், இந்தியாவின் தலைவி என்பதைக் கூட மறந்து வீட்டைவிட்டுப்போன தன் மருமகளுடன் ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டார்.

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் வருணைத் தன் வீட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டுமென்பது இந்திரா-மேனகா ஒப்பந்தம்.

### இந்திராவின் வேதனை

சில வாரங்கள் இது நடந்தது. அப்புறம் நடந்ததை வேதனையோடு இப்படிச் சொன்னார் திருமதி காந்தி:

''பேரனை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன். எத்தனையோ வேலைகளுக்கு மத்தியில், ஞாயிறு ஓய்வு எடுப்பதே என் பேரனைக் கொஞ்சி, சில மணிநேரம் அவன் மழலையிலே என்னை மறந்து, உலகக்கவலைகளை மறந்து இருக்க விரும்புவேன். போன் செய்து கேட்பேன். பொறுப்பாகப் பதில் சொல்வதில்லை. என்னைச் சித்திரவதை செய்யவேண்டுமென்பதற்காக - வெளியூர் போய்விட்டான் என்பார்கள். திங்கள் அன்று அனுப்புவதாகச் சொல்லுவார்கள். அன்று எனக்கு வேலை என்பது தெரியாதா? ஞாயிறு முழுவதும் என்பேரனுடன் இருக்கத்துடிக்கும் என்னைச் 'சோதனை'செய்வார்கள்...''

●

மேனகாவைக் காதலித்தே கைப்பிடித்தார் சஞ்சய்!

### சஞ்சய் காதலிகள்

சஞ்சய் மேனகாவுக்கு முன்னர் இரண்டு பெண்களைக்காதலித்திருக்கிறார்! ஒருவர் முஸ்லிம். மற்றவர் வெளிநாட்டுப் பெண்.

—இந்த இரு காதல்களும் சஞ்சய்க்கு கைகூடாதற்குச்சில குடும்பக் காரணங்கள் குறுக்கிட்டன.

1973 ஆம் ஆண்டில்,

இந்திரா குடும்பத்துக்கு மிக நெருக்கமானவரான மஹமத் யூனூஸ் வீட்டில் மேனகாவை சஞ்சய் முதல்தடவை சந்தித்தபோது, இருவரும் கட்டுண்டார்கள்!

இந்த விபரங்களை யூனூஸே தெரிவித்துள்ளார்.

அவர் வீட்டில்தான் சஞ்சய்-மேனகா திருமணமே நடந்தது.

மேனகாவின் தந்தை ஆனந்த் சிங் அமிதேஸ்வர் தாய். திருமணத்தை நடத்த மேனகாவின் பெற்றோருக்கு வசதியான வீடுகூட இல்லை. இதனால்தான் திருமணம் யூனூஸ் வீட்டில் நடந்தேறியது.

திருமணமான சிலவாரங்களிலேயே சஞ்சய் - மேனகா உறவில் 'இடைவெளி' ஏற்படத் தொடங்கியது.

சஞ்சய்க்கு வீடு-வேலை என்கிறபோக்கு.

ஆனல், மேனகாவோ-

பார்ட்டி, நண்பர்கள் என்று 'தடபுடல்' வாழ்க்கை பிடிக்கும்.

இதனல்-

இருவருக்கு மிடையில் வாத விவாதங்கள்...

சண்டை...

குடும்பத்தில் முக்கியமானவர்கள் தலையிட்டு உறவை அடிக்கடி சரிசெய்து வைத்தார்கள்.

●

சஞ்சய் தன் மகளைத் திருமணம் செய்ததை அடுத்து ஆனந்த்சிங் தான் பார்த்து வந்த வேலையை உதறித்தள்ளி விட்டு, இந்திரா காந்தியின் செல்வாக்கைப் பயன்படுத்தி, மாதம், பன்னிரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தில் வேலையொன்றில் சேர்ந்துகொண்டார்.

மேனகாவின் தாயார் அமிதேஸ்வர்விட்டாரா? கம்பனியொன்றில் டைரக்டரானர்!

பெரிய வீட்டையே வாங்கினர்கள்! 'சூரியா' என்ற பத்திரிகையை ஆரம்பித்தார்கள்!

### மேனகா அம்மா

மேனகாவின் அம்மா அமிதேஸ்வர்பற்றித் தரக்குறைவாகத்தான் பலர் பேசினர்கள்.

1982 நவம்பர் 'ஸ்டேட்ஸ்மன்' பத்திரிகையில் பி. என். பாலு என்பவர் எழுதியகுறிப்பொன்றில், 'என்னை அம்போ' என்று விட்டு வான்ஹீஸ் என்பவருடன் மேனகாவின் அம்மா அமிதேஸ்வர் போய்விட்டார்' என்று தெரிவித்துள்ளார்.

இவையெல்லாம் தெரிந்த பின்னரும் சஞ்சய் ஏன் மேனகாவைத் திருமணம் செய்து கொண்டார் என்று கேட்டதற்கு, யூனூஸ் சொல்கிறார்;

''சஞ்சய் ஏற்கனவே இரு தடவை காதலித்தவர். அவை கைகூடாததால், இந்தப் பெண்ணையும் இழக்க அவர் விரும்பவில்லை! இன்னும் வெளியில் சொல்ல முடியாத சில காரணங்களும் உண்டு.''



யூனூஸ்

●

1978 டிசம்பரில் இந்திரா ஜனதர்கட்சியால் கைதுசெய்யப்பட்டாரல்லவா!

அப்போது—

வீட்டையும் சமையலையும் கவனித்துக்கொண்டது இத்தாலிய மருமகள் ஸோனியா தான!

சிறைச்சாலைக்கு மாமியாருக்கு உணவுஎடுத்துச் சென்றதும் அவர்தான்!

அந்த நேரத்தில் மேனகா என்னசெய்து பொழுதைப் போக்கினர் தெரியுமா?

**ராஜகோபால்**

சஞ்சயுடன் சண்டைபோட்டுக்கொண்டு, அவரை நிம்மதியற்றவராக்கினர்!

நண்பர்களுடன் 'வீடியோ'ப் படம்பார்த்துக் கொண்டிருந்தார்!

மேனகா 'சிகரட்' கூடப் பிடிப்பாராம்! சஞ்சய்க்கு இது அறவே பிடிக்காத விஷயம்.

''என்ன சீக்கியப்பெண் நீ!'' என்று பலமுறை வருத்தப்பட்டிருக்கிறாராம்.

மேனகாவின் சிகரெட்பெட்டிகளைத் தூக்கிக் குப்பைக் கூடையில் ஒரு தடவை சஞ்சய் எறிந்தபோது, அவருடைய புத்தகங்கள் பொருட்கள் மீது சிகரெட் சாம்பரைத் தேய்த்து தன் கோபத்தைப் பதிலுக்குக் காட்டிக் கொண்டாராம் மேனகா.



மேனகா

சஞ்சயை மேனகா மதிக்காமல் நடந்ததற்கு ஒரு உச்சக்கட்ட உதாரணம்—

## கணவனைக் கோபித்து வீட்டை விட்டு ஓடினர்!

ஏதோ ஒரு கோபம் சஞ்சய் மீது மேனகாவுக்கு வந்துவிட்டது!

ஒருதடவை சஞ்சய் அணிவித்த நிச்சயதார்த்த மோதிரத்தை மேனகா கழற்றிக் கீழே எறிந்துவிட்டார்.

''இந்தக் குப்பை எனக்கு வேண்டாம்'' என்று கத்திக் கொண்டே அதனை அவர் எறிந்தார்.

அந்த மோதிரம்—

மறைந்த பிரதமர் ஜவர்ஹர்லால் நேருவின் மனைவி கமலாவுக்கு —இந்திராவின் அம்மா

(10ம் பக்கம் பார்க்க)

### சேர் பொன் இராமநாதன் நினைவு

இலங்கையின் புதல்வன்
என்கோ
இங்கி லாந்து சென்றே
கலங்கிய இனத்தைக்காத்த
கண்ணியக் கனவான்
என்கோ
துலங்கிய சட்ட மன்றில்
துலங்கிய மேதை என்கோ
நலங்களின் தலைவன்
என்கோ
நண்ணினர்க் கினியாய்
என்கோ

செந்தமிழ்ச் செல்வன்
என்கோ
சேவையின் விளக்கம்
என்கோ
பைந்தமிழ்ப் புலவன்
என்கோ
பாரதச் செல்வன் என்கோ
நந்தமிழ்க் கவிஞன்
என்கோ
நாடறிசாணக்கியன் என்கோ
எந்தமிழ்த்தலைவன் என்கோ
ஏமத்தின் துணையே என்கோ

இன்று நீ இருப்பாயாகில்
இன்னல்கள் துடைத்து
நிற்பாய்
மன்றுநீ சென்று ஆங்கே
மாருதம் போல வீசி
கன்றினைக்காக்கும் மேலாம்
கபிலையாய்காவல் செய்வாய்
அன்றினைப் பிரிந்த
ஆண்போல
அனைவரும் துயரம் ஆனேம்

வள்ளலே இராமநாதா
வாதிலே சிறந்த மன்னா
கள்ளிலே திளைத்த வண்டு
காமுறும் இசையைப்போலே
எள்ளிலே எழுந்த நல்ல
எழிலுடை மலரைப்
போலே
வள்ளலே இன்றுநீ
இருந்தால்
வருமுன்னர்க்காப்பாயன்றோ

முருக. வே. பரமநாதன்


# I. C. M. A.
## NEXT SESSION பின்வரும் திகதிகளில் ஆரம்பமாகின்றது
## 1985 MAY - JUNE பரீட்சைகள்

| | | |
|---|---|---|
| ICMA-SECTION-STREAM I | (WEEK DAYS) | 1-12-84 |
| STREAM II | (WEEK ENDS) | 1-12-84 |
| ICMA-SECTION B | (WEEK ENDS) | 1-12-84 |
| ICMA-PROFESSIONAL PART I | (WEEK ENDS) | 1-12-84 |
| CHARTERED PRELIMINARY | (WEEK ENDS) | 1-12-84 |
| IAA - PART I ,, | (WEEK ENDS) | 1-12-84 |
| PART II ,, | (WEER ENDS) | 15-12.84 |
| IAB - FOUNDATION ,, | (WEEK ENDS) | 1-12-84 |
| | (WEEK DAYS) | 5-12-84 |
| IAB - INTERMEDIATE | (WEEK ENDS) | 1-12-84 |
| | (WEEK DAYS) | 12-12-84 |
| IAB - FINAL ,, | (WEEK ENDS) | 15-12-84 |
| IDPM - PART I ,, | (WEEK DAYS) | 3-12.84 |
| PART II ,, | (WEEK DAYS) | 12-12-84 |

விரிவுரையாளர்கள்:

MRS. S. SUNDARALINGAM, MISS. PUSPA KRISHNAPILLAI, J. SATHIADAS, V. KANAGA-SABAPATHY, EUGENE MARIAMPILLAI, R. N. VARENDRAN, M. NALLANTHUWAN, K. NATHAN, K. KUMAR, K. JEYARATNAM P. SIVAPATHASUNDARAM.

குறிப்பு:

திரு. I. T. பெனடிக்ற் அவர்கள் தவணையின் இறுதிக் காலத்தில் ICMA - SECTION B மாணவர்களுக்கு வர்த்தக சட்டம் (BUSINESS LAW) பாடத்தின் முழுபாடத் திட்டத்தையும் பூர்த்திசெய்வார்.

கணக்கியல்துறைக்கு அகில இலங்கையிலும் அதிக மாணவர்கள் தேர்ந்தெடுப்பது OXONIA INSTITUTE. வடமாகாணத்தில் கணக்கியல் துறைக்கு மிகக் கூடுதலான மாணவர்கள் தேர்ந்தெடுப்பது CANTABIA INSTITUTE.

★ FEES FOR ICMA - A, B, and PI
Rs. 400/- only PER PART

இலவசம்:- சைக்குளோஸ்ரைல்ட் பாடக்குறிப்புகள் வினக்கள் விடைகள்.

# CANTABIA INSTITUTE
(SHOOT OF OXONIA, COLOMBO)
21, MAIN STREET, JAFFNA.
T'PHONE: 24201




★ தொகுப்பு: என். செல்வராஜா

## பெயரால் வந்த வினை

வில்லங்கம், பொத்தடாவாய் என்ற இரு சிநேகிதர் இருந்தனர். அவர்கள் இருவரும் ஒருநாள் பட்டணம் சென்றுவிட்டு வீடு திரும்புவதற்கு பஸ்சில் ஏறிஇருந்தனர். பின்னர் வில்லங்கம் சொக்கலேட் வாங்குவதற்காக இறங்கிக் கடைக்குச் சென்றுவிட்டான். பஸ் புறப்பட ஆயத்தமானது. உடனே பொத்தடாவாய் பஸ் சாரதியிடம் போய் வில்லங்கம் வரும்; சிறிதுநேரம் நிற்பாட்டு என்று கூறினன். சாரதியோ நேரம்போவதாகக் கூறி பஸ்ஸை ஓட்டினர். மீண்டும் வில்லங்கம் வரும் பஸ்ஸை நிறுத்து என்று பொத்தடாவாய் கூறினன். என்ன வில்லங்கம் வரப்போகுதோ என்று பயந்த பஸ் சாரதி பொலிஸ் நிலையத்திற்கு பஸ்ஸைச் செலுத்தினன். பொலிஸ் நிலையத்தில் பஸ் சாரதி நடந்தவற்றை விளக்கிக் கூறினன்.

உடனே பொலிஸ்காரர், அந்த பஸ்ஸில் வந்தவரை அடையாளங்காட்ட முடியுமா என்று கேட்க, சாரதியும் இவர்தான் ஆள் என்று பொத்தடாவாயைக் காட்டினர். பஸ் சாரதியிடம் என்ன கூறினுய் என்று பொலிஸார் கேட்டனர். ''வில்லங்கம் வரும் பஸ்ஸை நிறுத்து'' என்று கூறியதாக அவன் பதிலளித்தான். என்ன பெயர் உனக்கு என்று பொலிசார் கேட்க 'பொத்தடா வாய்' என்றுன் அவன். உடனே பொலிசார் தமக்குதான் இப்படி ஏசியதாக நினைத்து பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து வழக்குத் தொடர்ந்தனர். நீதிமன்றில் பொத்தடாவாய் நடந்தவைகளைக் கூறினன் நீதிபதி வில்லங்கம், பொத்தடாவாய்என்ற பெயரால் வந்தவினை என்று கூறி பொத்தடாயை விடுதலை செய்தார்.

ந. கிருஸ்ணகுமார்,
தரம் 9 B,
மானிப்பாய்இந்துக்கல்லூரி,
மானிப்பாய்.

## பள்ளிப்பகிடி

சஜ — ஆ Art)டுக்கு என்னென்ன கொண்டு வந்தனி.
தீபன் — இலை, தவிடு, பிண்ணுக்கு.

●

பாபு — நான் சோதனையில் பாஸ்ஆகியதற்காக அப்பா என்னை ''சந்நிதி''க்குக் கூட்டிப்போய் மொட்டை அடிச்சவர்.

கோபு: — நான் சோதனையில் பெயில் ஆகியதால் அப்பா என்னை சலூனில்கொண்டு போய் மொட்டை அடிச்சவர்.

●

ஒரு ஆங்கில ஆசிரியரும் வேறொருவரும் சந்தையில் சந்தித்தனர். இருவரும் உலக அரசியலைப்பற்றி அரைமணிநேரம் கதைத்தனர். இறுதியில் ஆங்கில ஆசிரியர் ''இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்.'' என்பதை ஆங்கிலத்தில் ''வட் யூ மீன்''? என்று கேட்டார். ஆனுல் மற்றவருக்கோ எள்ளளவும் ஆங்கிலம் தெரியாது. அவர் நினைத்தார் ஆங்கில ஆசிரியர் தான்வாங்கி வைத்திருக்கும் மீனைப் பற்றிக் கேட்கிருரோ என நினைத்துஉடனே ''பாரை மீன், மாஸ்டர்'' எனப் பதில் அளித்தார்.

எஸ். சண்முகதாசன்.
8ம் தரம்
யாழ்/பரியோவான்,
கல்லூரி.

## இந்திராவை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

வுக்கு நேருவின் தந்தை மோதிலால் நேரு அன்பளிப்பாகக் கொடுத்த மோதிரம் அது. அதாவது மோதிலால் நேரு தனது மருமகள் கமலா நேருவுக்கு அன்பளிப்பாக வழங்கிய மோதிரம்!

''இதன் மதிப்பு அவளுக்குத் தெரியவில்லை'' என்று சொல்லி அதனை எடுத்து அன்னை இந்திராவிடம் மகன் சஞ்சய் கொடுத்தார்.

சஞ்சய் இறப்பதற்குச் சில நாட்கள் முன்னர் நடந்த ஒரு சம்பவம்—

''இந்திரா மூலமாக ஒரு விஷயம் செய்துதரவேண்டும்'' என்று தன் கணவனிடம் மேனகா வற்புறுத்தியபோது,

''உன் கரைச்சலுக்கு ஒரு முடிவில்லையா?'' என்று சஞ்சய் கோபத்துடன் ஏச, ''என்ன நடந்துவிட்டது? ஏன் கோபப்பட்டு ஏசுகிறீர்கள்? நீங்களும், உங்கள் அம்மாவும்'' என்று கத்திவிட்டு. மேனகா காரை எடுத்துக் கொண்டு, தன் தாயார் வீட்டுக்கு அந்த அர்த்தராத்திரியில் போய்விட்டார்!

இவற்றையெல்லாம்பார்த்து இந்திரா எவ்வளவு வேதனைப் பட்டிருப்பார்? இந்திரா தன் மகனை நினைத்துக் கண்கலங்கிய சம்பவங்கள் நிறைய உண்டு.

## பொம்மை

சின்னச் சின்னச் பொம்மை
சிங்காரப் பொம்மை
சின்னச் சின்ன காலும்
சின்னச்சின்ன கையும்
சிரித்த நல்ல முகமும்
சேர்ந்த நல்ல பொம்மை

அப்பா தந்த பொம்மை
அழகு மிக்க பொம்மை
கோபம் கொண்டு
அடித்தாலும்
கோபிக்காத பொம்மை
உண்ண உணவும் தேவை
இல்லை
உறங்க மெத்தையும்தேவை
இல்லை
என்றும் இளமைஅழகுடனே
இருக்கும் நல்ல பொம்மை

சோ. சிவாநந்தி
இராமநாதன் கல்லூரி
சுன்ஞகம்

## நினைவாற்றலுக்கு

(12ம் பக்கத் தொடர்ச்சி)

கும் ஊர்கள் தோறும் மனை விளக்கஞ் செய்தமையால் யாழ்ப்பாணத்துச் சைவக்கல்விப் பாரம்பரியம் பேணப் பெற்றுப் பீடுநடை போட்டு வருகின்றது. இன்று நாவலர் வழியில் உருவான ஆசிரியர்களின் வழியில் உருவான சைவாசார சீலர் எத்தனையாயிரவர் என்பதை எண்ணவும் முடியுமோ?

## மூளைக்குவேலை 1

(மூளைக்குவேலை சரியாக நிரப்பி அனுப்பியோர் விபரம் வருமாறு)

கிருஷ்ணதுரை ஜெய்சந்தர் பண்ணுகப் சுழிபுரம், வைதேகி விவேகானந்தன் அரசவீதி உரும்பிராய் கிழக்கு, அமிர்தசிங்கம் குகதாசன் விளானைகளபூமி காரைநகர், அசம்ரா அந்தோனிப்பிள்ளைகரம்பொன் மேற்கு ஊர்காவற்றுறை, மரிஸ்ரெலா அந்தோனிப் பிள்ளை இளவாலை மடம் மகாவித்தியாலயம், சி சிவசங்கர் 'லிங்கவாசம்' திருநெல்வேலி, சகுந்தலா இராஜதுரை காளிகோவிலடி திருநெல்வேலி, பா. பவானி பாங்சால்வீதி யாழ்ப்பாணம். செல்வி ரோகினி சோமசுந்தரம் ''மணிமகல்'' மண்டைதீவு-4 ஞா. ஞானரதி பொலிஸ் விடுதி, ஊர்காவற்றுறை. ம சிவபாலன் பண்ணை வீதி நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறை, கே, கேதீசன் கலா பவனம் நீர்வேலி வடக்கு. இரா. தனராஜ் இராஜசிங்கர்வளவு வல்வெட்டித்துறை, குலசேகரம்பிள்ளை விஜயா யோகவாசம் திருநகர் கிளிநொச்சி, ரி.மாலாஞானேதயம் மானிப்பாய், ஞா. வீ பா. அரேஸ்வரன் புனித மாட்டினுர் குருமடம், யாழ்ப்பாணம், சி கேதீஸ்வரன் ஈஸ்வர இல்லம் ஆனைக்கோட்டை. க. ஜெயரதி அருள் இல்லம் கணேஸ்வரம் அளவெட்டி. செல்வி. வி சாந்தினி நீர்வேலி மத்தி. நீர்வேலி மேதினி சந்திரசேகரம் மருதடிபிரதான வீதி பருத்தித்துறை, செல்வி. க. கமலராணி, சுதுமலைவடக்கு மானிப்பாய். ஜோ. நிர்மலன், 40/1 கோவில் வீதி யாழ்ப்பாணம். ஏ ஜே. சதீஷ் 65 கொழும்புத்துறை வீதி பாண்டியன்தாழ்வு பிரேமன் சுப்பிரமணியம், கரவெட்டி கிழக்கு தே சபேசன், சக்திஅகம் கொக்குவில் மேற்கு ஸ்ரீ விந்தியா நித்தியானந்தக் குருக்கள் மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். பா. கிருபரன் கோண்டாவில் கிழக்கு. தயாழினி நாகரட்ணம் 28/1, பலாலி ரோட் கந்தர்மடம். அ ஜெயந்தன் 3 4/6 செட்டித்தெரு நல்லூர் மா. இரத்தினமலர் கந்தன் வீதி நீர்வேலி கணேசலிங்கம் ஈஸ்வரப்பிரியா 83 அரசடிவீதி யாழ்ப்பாணம் கு சிவச்செல்வன் 'தங்கவேல் வாசா' சுன்ஞகம் கிழக்கு செ. பிரதீபன் 740, நாவலர் வீதி யாழ்ப்பாணம். து கோவிந்தன் 2ம் வட்டாரம் நயினதீவு க. ஞானசேகரன் கொக்குவில் கிழக்கு கொக்குவில் ஜெ. ஜெயந்தி78/4 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் ஜெயச்செல்வி பஞ்சலிங்கம் உரும்பிராய் கிழக்கு நிரஞ்சனி இராஜசேகரம் 30/15 கனகரத்தினம் வீதி யாழ்ப்பாணம் ச. சிவகுமார் ஆறுகால் மடம் ஆனைக்கோட்டை செல்லத்துரை நகுலேஸ்வரி வசந்தபுரம் இளவாலை ப. பிரியந்தி 'பத்மஸ்த்தான்' நாவலர்ரோட் ஞானறஞ்சினி கதிரவேலு மகளிர்கல்லூரிஉடுப்பிட்டி, த. சசிகரன் பாண்டியன் தாழ்வு யாழ்ப்பாணம். நட ராசா சுலோசஞ கட்டைரோட் கிராம்புவில், சாவகச்சேரி. பொ. பிரபாகரன் செட்டிச்சோலை அளவெட்டி வடக்கு. எஸ் பாபு சேர் பொன் இராமநாதன் வீதி யாழ்ப்பாணம். செ. தேவன் சரவணை கிழக்கு வேலணை 9 ஜி ரேய்டன்ரன் 25/7 சென்றலீஸ்ரோட் குருநகர் ப. விஜித்தா 91/1 அரசடி வீதி யாழ்ப்பாணம், எம் பாபு சென் யேரிஸ் வீதி தலைமன்ஞர். அ. ஆரூரன் சண்டில் கரவெட்டி மேற்கு. ம பிரதீபன் முகமாலை எழுதுமட்டுவாள் சி விஜிதா நீர்வேலி மத்தி குணவதி குமாரசிங்கம் மந்துவில் கொடிகாமம். எஸ் கோவிந்தராஜன் 52/3 கோண்டாவில் மேற்கு த. குகசீலன் நாவலர் வீதி வண்ணர் பண்ணை. ஸ்ரீ ஸ்ரீ சேதுபரன் 'ஸ்ரீபதி' பாரதிவீதி சந்நிதிவீதி பத்தமேனி அச்சுவேலி. சி சிவஜெனனிவாசா 447 பரந்தன், சு. லிங்கேஸ்வரன் லட்சுமி பவனம் வல்வெட்டித்துறை. நா உத்தமராஜன் புதுவளவு கரணவாய் வடக்கு வல்வெட்டித்தறை

(மிகுதி அடுத்த வாரம்)

## விலங்குகளைப் பற்றி....

★ உலகில் உயர்ந்த இனக் குதிரைகள் அவுஸ்திரேலியாவிலும் அரேபியாவிலும் உண்டு. குதிரையின் பாலையும் இறைச்சியையும் விரும்பியுண்பவர் மங்கோலியராவர். இலங்கையில் நெடுந்தீவு, மன்னுர் பிரதேசங்களில் குதிரைகள் உள்ளன.

★ தன் கூட்டைத் தானே கட்டிக் கொள்ளாத பறவையினம் 'கக்கூ' என்ற இனமாகும்.

★ மெறினே என்ற இனஆடுகள் நமக்குக் கம்பளிக்கு உரிய ஒருவகை மயிரைத் தருகின்றன.

★ கால்களை உயர்த்திப் பாயாத ஒரு மிருகம் யானையாகும். இதன் துதிக்கையில் தசைநார்கள் மொத்தம் 40000 உள்ளனவாம்!

★ இந்தோனேசிய தீவுகளில் மட்டுமே சனேலுச்டர் எனப்படும் மிருகம் காணப்படுகிறது

★ ,ஊங்காரப் பறவை' பின்னேக்கிப்பறக்கும் சக்திகொண்டது.

★ விலங்குகளில் மின்னதிர்வு உள்ளவிலங்கு விலாங்கு மீன் ஆகும்.

★ மிகவும் வேகமாக ஓடக்கூடிய மிருகம் சீற்றுப் புலியாகும்.

★ சமாதானத்தின் சின்னமாக விளங்கும் பறவை புருவாகும்.

தகவல்: த. உதயபல்லவன் 10 பி நெடுந்தீவு மகாவித்தியாலயம். சுரேந்தினி கார்த்திகேசு யாழ்/வேம்பலடி மகளிர் கல்லூரி. சாயிஜனனி பாலகிருஷ்ணன் 6ம் தரம் கொக்குவில் இந்துக் கல்லூரி

## சொல்லமுதம்

இரு பொருள்- கல்வி, செல்வம்
இருவினை- நல்வினை. தீவினை
இருநிதி- சங்கநிதி, பதுமநிதி
ஈரறம்- இல்லறம், துறவறம்
இருதிணை- உயர்திணை, அஃறிணை.
இருகுரவர்- அன்னை, தந்தை
முப்பழம்- மா. பலா, வாழை
முக்காலம்- இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
மும்மூர்த்திகள்- பிரம்மா, விஷ்ணு, உருத்திரன்
முத்தொழில்- ஆக்கல், காத்தல், அழித்தல்.

தகவல்:
செல்வி ரெசரி டெல்சியா
சிங்கராசா
கிளிநொச்சி.

## துறைமுகங்கள்

பெரிய பிரித்தானியா - லண்டன், லிவர்பூல், போர்ட்ஸ்மத், நியுகாசில், பெல்பாஸ்ட்
பிரான்ஸ் - மார்செயில்ஸ், லாஹாவ்ரேகலே, நைசே
ஸ்பெயின் - பார்செலோனு, கேடிஸ், வலென்ஷிய
போர்த்துக்கல் - லிஸ்பன்
பெல்ஜியம் - அன்ற்வேப்
ஒல்லாந்து - அம்ஸ்ட்ர்டாம்
மே ஜேர்மனி - ஹம்பர்க்
இத்தாலி - நெப்பில்ஸ், ஜேனேவா, வெனிஸ்
துருக்கி - இஸ்தான்புல், இஸ்மீர்.
நோர்வே - நஸ்லோ, பேர்கன், டிரெவன்டெய்ம்.
சுவீடன் - ஸ்டோக்ஹோம், மால்மோ.
பின்லாந்து - ஹெல்சிங்கி, ரூர்க்கு
குமேனியா - கொன்ஸ்டான்டா.
கிரீஸ் - எதென்ஸ்
பல்கேரியா - வார்ஞ பேர்காஸ்.
யூகோஸ்லாவியா - ஸ்பினிற், டுப்ரோவ்ரிக்.
தொகுப்பு:

மா. போல்நியுமன்.
யாழ்/புனித சம்பத்தரிசியார் கல்லூரி.

## வகுப்பிலே நடந்தது

எங்கள் வகுப்பில் அன்று ஆங்கிலப் பாடம் நடந்து கொண்டிருந்தது. எனக்கு அடுத்ததாக உட்கார்ந்திருந்த மாணவர் கைகலைக் கன்னத்தில் ஊன்றியபடி தூங்கிவிட்டார். இவரை அடுத்து உட்கார்ந்திருந்த மாணவன் மிகவும் குறும்புக்காரன்.

பாடம் மிக சுவாரசியமாக நடந்து கொண்டிருந்தவேளையிலே, தூங்கிக்கொண்டிருந்த மாணவரை மெதுவாகத் தட்டி எழுப்பி, ''ஆசிரியர் உம்மைக் கிட்ட வரும்படி கோபமாகக் கூப்பிடுகிருர் என்று கிளப்பி விட்டார்.

நல்ல தூக்கத்திலிருந்த நண்பர் திடீரென எழுப்பப்பட்டதும் என்னவோ ஏதோவென நினைத்துத்தடதடவென்று இருக்கையிலிருந்து எழுந்து ஆசிரியரிடம் கடகடவென்று நடந்து போய் அருகில் நின்று கூப்பிட்டனீங்களே சேர்'' என்ருர்.

மற்ற மாணவர்களுக்கு என்ன நடந்ததென்று புரிய அதிக நேரமாகவில்லை. வகுப்பறையில் எழுந்த சிரிப்பொலி அந்த மாணவரிடமிருந்த கொஞ்சநஞ்சத் தூக்கத்தையும் பறக்கடித்துவிட்டது.

பார்த்திபன்
நித்தியானந்தன்
கொக்குவில்

## தமிழில் பிறமொழி நூல்கள்

தமிழ் மொழியில் உள்ள பிரபலமான பிறமொழி நூல்கள் சிலவும் அவற்றின் ஆசிரியர்களும்:

1. குடியரசு-பிலேட்டோ
2. அரசியல் - அரிஸ்டோட்டில்
3. அர்த்தசாஸ்திரம் - சாணக்கியர்
4. ஆயுதமும், மனிதனும் - பேணுட்ஷோ
5. போரும் சமாதானமும் லியோ ரால்ஸ்ராய்
6. சத்தியசோதனை- மகாத்மாகாந்தி
7. மனித உரிமைகள் - பெயின்
8. எனது போராட்டம்- ஹிட்லர்
9. மூலதனம்- கார்ல்மாக்ஸ்
10. அரசும், புரட்சியும்- லெனின்
11. மனிதனின் சமயம் - ரவீந்திரநாத்தாகூர்
12 உலக சரித்திரங்களின் தோற்றம்-நேரு
13. இரண்டாம் உலக யுத்தம்-வின்ஸ்டன் சேர்சில்
14 அன்னை - மாகஸிம்கோர்க்கி
15. அமெரிக்காவே எழுந்திரு -மாட்டின் லூதர்கிங்
16. ஜூலியர்சீஸர் - ஷேக்ஸ்பியர்
17 இராமாயணம்- வால்மீகி
18. சாகுந்தலம்- காளிதாசர்
19. கிராமத்தின் மாற்றம்- மாட்டின் விக்கிரமசிங்கா
20. இந்திய தத்துவஞானம்- டாக்டர் இராதாகிருஷ்ணன்

சண்முலிங்கம் வான்மதி
9ம் தரம்
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# சேர் பொன். இராமநாதன்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு ஏற்படுத்தும் நோக்குடன் அமைந்திருந்தது. ஆங்கிலத்தைப் பேசக்கற்றுக் கொண்டவர்கள் சிங்களத்தை உபயோகிப்பதை முற்ருகப் புறக்கணித்து வருவதுபற்றி அவர் ஆழ்ந்த கவலை தெரிவித்தார்

''சிங்களவர்களின் உதடுகள் சிங்களத்தைப் பேசவில்லையெனில் அதனைப் பேசுவதற்கு வேறுயார் உளர்?'' என்று அவர் பெரும் கரகோசத்தின் மத்தியில் கேட்டார். அவர் பௌத்தத்துக்கு ஆற்றிய சேவைகள் அளப்பரியன அவரது சேவைபற்றி ''சரசவி சந்தரச' என்ற பத்திரிகை தனது 1889ம் ஆண்டு மே 28ந் திகதிய இதழில்.

''வெசாக் விடுமுறை' பௌத்த ஆலயங்கள் மசோதா ஆகியவை சம்பந்தமாக இராமநாதன் அவர்கள் காட்டிய அக்கறைக்காக பௌத்தர்கள் இந்நாட்டின் தேசியப்பிரிவினர் என்றவகையில், அவருக்கு ஒப்பற்ற நன்றிக்கடன் செலுத்த வேண்டியவர்கள் ஆவர். பாளிக் கல்லூரி, சமயஞான சங்கம், ஆகியவற்றில் இவர் பௌத்த மாணவருக்குக்கூறிய தெம்பூட்டும் வார்த்தைகளும் அவர் பௌத்த சமயத்துக்கு வேறு பலவகைகளிலும் பலலாற்ருலும் செய்த உதவிக்கும் அவரை இலங்கைப் பௌத்தர்களின் மட்டில்லா அன்புக்குரியவர் ஆக்கிவிட்டது''என்றுஉள்ளது. இராமநாதன் அவர்களின் சேவைக்கு நன்றிக்கடன் செலுத்துவதற்கு அடையாளமாக சேர் எட்வின் ஆர்னேல்ட் எழுதிய ''ஆசிய ஜோதி'' என்ற நூலின் மேல் பிரதியின் பக்கம் ஒன்றை கேர்ணல் ஒல்கொட் அவருக்கு அனுப்பிவைத்தார். ''சட்டசபையில் பௌத்த சமூகத்துக்கு அவர் ஆற்றிய பராக்கிரமமானஉதவிக்காக இது அவருக்கு மிகப்பொருத்தமான ஒன்ருகும்'' என்று ஒல்கொட் குறிப்பிட்டிருந்தார்.

சைவக்கல்வி இலங்கையில் எழுச்சிபெற்று விளங்கக் கால யிருந்தவர்களுள் சேர். இராமநாதன் அவர்கள் முக்கியமானவர். இலங்கையின் பெருந்தலைவர்களில் ஒருவராகப் போற்றி மதிக்கப்பட்டஅப் பெரியார் அரசியற்றுறையில் ஆற்றிய சேவை லு கல்வித் துறையில் ஆற்றிய சேவையே இன்றும் எபமிடையேநிலைத்து நிற்கின்றது. கல்விப்பணிக்குப் பொதுவாகவும், சைவக்கல்விக்குச் சிறப்பாகவும்,அவர்செய்த சேவை ஊழியுள்ளவரை இலங்கையரால் ே பாற்றப்படும் அளவுக்கு சிறப்புப் பெறுகின்ருர். சட்டசபையில் அங்கத்தவராகக் கடமையாற்றிய வாய்ப்பினைப் பயன்படுத்தி கிறிஸ்தவ மதகுருமாருடைய சகிப்பின்மை,சைவமாணவருக்குக்கிறிஸ்தவதத்துவத்தைகட்டாயபாடமாகப் போதித்தல் ஆகிய செயல்களைக் கண்டித்து குரலெழுப்பினர் வடமாகாணக் கல்வியைப்பொறுத்தமட்டில் அரசு அக்கறையில்லாமல் இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஏனைய மாகாணங்களைப்போல அங்கும் ஆங்கிலப்பள்ளிளும், ஆங்கில சுயமொழிப்பள்ளிகளும் அமைக்கப்படவேண்டும் என வற்புறுத்தினர்.

## கல்லூரிப்பணி

பக்தி நிரம்பிய இந்துவாக விளங்கிய இராமநாதன் அவர்கள், இந்து மாணவர்கள் இந்து சமயப புறச்சூழலிலேயே பயில்வதற்கு வசதி செய்யவேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்தார் 1913ம் ஆண்டில் பெண்களுக்கான இராமநாதன் கல்லூரியையும், 1924ம் ஆண்டு ஆண்களுக்கான பரமேஸ்வரக் கல்லூரியையும், 1916ல் கோப்பாயில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஒன்றையும் நிறுவுவதற்காகத் தமது சக்தி, செல்வம், காலம் அனைத்தையும் செலவிட்டார். கல்லூரிகளைக் கட்டி முடித்தது மட்டுமல்லாமல் அவை என்றும் தொடர்ந்து செயலாற்றக் கூடியவாறு அவற்றுக்கு வேண்டிய சொத்துக்களையும் தர்மதானஞ் செய்துவைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கனவாம்.

## பல்கலைக்கழகப் புகழ்

தமது சகோதரர் சேர் பொன்னம்பலம் அருணுசலம், தமது மைத்துனர் டாக்டர் ஆனந்த கே. குமாரசுவாமி ஆகியோருடன் சேர்ந்து இலங்கையில் பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும் என்ற இயக்கத்தை முன்னின்று நடத்திய சேர் இராமநாதன் அவர்கள், மூன்று தசாப்தங்களின் பின்னர் 1929ம் ஆண்டில் அறிக்கை சமர்ப்பித்த றிடெல் பல்கலைக்கழகக் கமிஷனில் அங்கத்தவரகப் பதவி வகித்தார். 1974ம் ஆண்டில் பரமேசுவரக் கல்லூரி இலங்கைப் பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண வளாகத்தின் மத்திய நிலையமாக்கப்பட்டது. இன்று முழுமைபெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக உருவெடுத்துள்ளமை அவரது ஆத்மார்த்தமான சேவையை எடுத்துக் கூறுவதாயுள்ளது. 1923ம் ஆண்டில் நிறுவப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சபையின் ஸ்தாபகத் தலைவராகவும், அச்சபை நிர்வகித்த பாடசாலைகளின் முதலாவது முகாமையாளராகவும் சேர் இராமநாதன் பணியாற்றினர். இந்துசமயம் பற்றியும் அதன் தத்துவங்கள் பற்றியும் அவர் ஏராளமாக எழுதியுள்ளார்.

## அழியா ஆலயம்

கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பல வாணேஸ்வரர் கோயில் பொன்னம்பல முதலியாரால் 1857ம் ஆண்டில் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அவர் மகனை பொன் இராமநாதனல் தென்னிந்திய திராவிடக்கட்டடச் சிற்பமுறைப்படி கருங்கல்லாற் கட்டப்பட்டு 1912ம் ஆண்டு குப்பாபிஷேகம் செய்யப்பட்டது. திராவிடக் கட்டடக் கலை வடிவுக்கு இலக்கணமாக அமைந்திருக்கும் கோவில் இதுவொன்றே

## நீங்கா நினைவலைகள்

ஆன்மீக அருள் பெற்ற நாயன்மார்களின் சமாதியில் வைக்கப்படுவது போலவே 1930ம் ஆண்டு நவம்பர்மாதம் 27ந் திகதி இறைவனடி சேர்ந்த சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் பூதவுடலும் சுன்னுகத்திலுள்ள இராமநாதன் கல்லூரி மைதானத்தில் சமாதி வைக்கப்பட்டது. கொழும்பு காலிமுகத்திடல் பழைய பாரளுமன்றக் கட்டட வளவில் அவரது உருவச் சிலை நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவைச்சேர்ந்த பிரபலகல்விமானும் இராஜதந்திரியுமான தி. கே பி எஸ் மேனன் சேர் இராமநாதன் அவர்களைப் பற்றி ஒருமுறை குறிப்பிடுகையில், அவரது நினைவு எந்த ஒரு குறிப்பிட்ட சமூகத்தினதுமோ அல்லது சாகித்தியத்தினரதுமோ சொத்தல்ல. அவருடைய மகத்துவம் தேசிய மட்டத்திலோ அல்லது பூகோள மட்டத்திலோ எல்லை வரையறை எதுவுமற்றது'' என்று தெரிவித்தார்.

# மோட்டார் சைக்கிள் கொள்ளை

(மாவிட்டபுரம்)

கீரிமலை விவசாய சேவை நிலைய போதனுசிரியரின்மோட்டார் சைக்கிள் இனந்தெரியாத நபர்களால் கொள்ளையடிக்கப்பட்டதால் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி போதனுசிரியரின் 86ஸ்ரீ3126 இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் கடந்த 15ம்திகதி திருநெல்வேலி விவசாய திணைக்கள அலுவலகத்திற்கு முன் வைத்து இனந்தெரியாத 3 இளைஞர்களால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டது.

# வேலணை செல்லப்பாச் சாமியார் செய்த சிவப்பணிகள்



வேலணைகிழக்கைச் சேர்ந்த செல்லப்பாச்சாமியார் சிவபதம் அடைந்து இன்று முப்பத்தொன்ரும் நாள் இவரின் சைவசமயத்தொண்டின் பிறப்பிடம் திருக்கேதீச்சரமாகும். முடிவிடத்தை வேலணை நால்வர்மடம் எனலாம்.

இன்று திருக்கேதீச்சரம் தன் பண்டைப் பெருமையைப் பெற்றுச் சைவநன்மக்களை ஈர்த்து இன்னருள் பாலிக்கும் சிவத்தலமாகச் சிறந்து ஓங்குகிறது. இத்தலம் அடர்ந்த காடாகக் கிடந்த காலத்தில் அங்கு தங்கியிருந்து இரவுபகலாகத் தொண்டாற்றியவர்களில் செல்லப்பாச் சாமியார் முன்னணியில் விளங்கினர்.

கொழும்பிலும் பிறநகர்களிலுமுள்ள சைவப்பெரியார்கள் வணிகர்கள், அரச உத்தியோகத்தர்கள் முதலானேர் வீடுகளுக்குச்சென்று அவர்களைத் திருக்கேதீச்சரத் திருப்பணியில் நாட்டங்கொள்ளச் செய்த தொண்டர் அவர்திருக்கேதீச்சரத் திருப்பணிச்சபை தோன்றுதற்கு அவர் அரும்பாடுபட்டார். இச்சபையின் அலுவலர்கள் விரும்பியவாறு பல பணிகளைச் செயதார்.

திருக்கேதீச்சரத்தில் தம் ஆற்றலுக்கும் பிறர் உதவிய பொருளுக்கும் அமையத் திருஞானசம்பந்தர் மடம் எனும் பெயருடன் ஒருசிறுமடத்தைப் பகுதி பகுதியாகக் கட்டும்பணியிலும் ஈடுபட்டார்.

திருக்கேதீச்சரப் பணிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் சமயாசாரியர்கள் நால்வரின் திரு அருட் செயல்களும் பெருமையும் தொண்டுகளும் அவரை ஆட்கொண்டன

திருக்கேதீச்சரப் பணிகள் தம்முதவியின்றிச் சிறந்தோங்கும் என உணர்ந்த அவர் தமது பிறப்பிடமான வேலணையில் நால்வர் மடமொன்றைக் கட்டும் பணியில் ஈடுபட்டார். வேலணை முத்துமாரியம்மன் கோவிலுக்கண்மையில் பெருங்குளத்துக்கருகில் மடத்தைக் கட்டியெழுப்பினர்.

இந்த மடத்திலிருந்து அவர் பல சைவப் பணிகளை ஆற்றினர். நால்வரின் படங்களை மரத்தில் பிரதிட்டை செய்து நாள் தோறும் பூஜைசெய்து வந்தார். நால்வரின குருபூஜைகளையும் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்தினர். சைவசமய அறிஞர்களை அழைத்துச் சிறப்புச் சொற்பொழிவுகள் செய்வித்தார், தேவாரப் பயிற்சி, புராணபடனம் முதலியனவும் அவருடை பெருமுயற்சியால் நடைபெற்றன.

இப்பொழுது அவர் சிவனடி சோந்துவிட்டாலும் அவர் கட்டிய நால்வர் மடம் அவருடைய சிவத்தொண்டின் நினைவுக்குறியாக நிலைத்து நிற்கும் அம்மடத்தில் அவர்செய்த சைவத் தொண்டுகளைத் தொடர்ந்து செய்தலே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனகும்.

கா. பொ. இரத்தினம்

# வயாவிளான் தபால்நிலையத்தில் பெண்களுக்கு ஓய்வூதியம்

(மாவிட்டபுரம்)

வசாவிளான் தபால் நிலையத்தில் இம்முறை பெண்களுக்கு மட்டும் ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

வாசவிளான் தபால் நிலைய அதிபர் திரு. சி. தர்மராஜன் எடுத்துக்கொண்ட பெருமுயற்சியால் கடந்த மாதங்களில் தபால் நிலையத்தில் சேரும் பணத்தைக் கொண்டு வசாவிளான் பகுதியைச் சேர்ந்த 100 க்கு மேற்பட்ட ஓய்வூதியக்காரர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது.

இதனுல் அவர்கள் யாழ். பட்டினம் சென்று அலையாமல் வசாவிளானிலேயே ஓய்வூதியத்தைப் பெறமுடிந்தது.

ஆனுல் இந்த மாதத்திற்குரிய ஓய்வூதியத்தை வழங்கப் போதிய பணம் தபால் நிலையத்தில் சேராமையால் அப்பகுதிப் பெண்களுக்கு மட்டும் ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

# தெல்லிப்பழைப் பகுதியில் இலகுவான முறையில் பென்ஷன்பெற ஏற்பாடு

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழைப் பகுதி ஓய்வூதியம் பெறுவோர் இலகுவான முறையில் தமது ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள தெல்லிப்பழை ஓய்வூதியம் பெறுவோர் விழிப்பு நலன் புரிச்சங்கம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இப்பகுதி ஓய்வூதியம் பெறுவோர் யாழ்ப்பாணம் சென்று அலையாமல் யாழ். அரசாங்க அதிபரின் அனுமதியுடன் தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க கிராமிய வங்கியில் ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டு இந்த மாதம் முதல் இந்த ஏற்பாடு செயல்பட ஆரம்பித்துள்ளது.

தெல்லிப்பழை ஓய்வூதியம் பெறுவோர் விழிப்பு நலனபுரிச் சங்கத்தைச் சேர்ந்ததிரு. இ. சபாரத்தினம் இது சம்பந்தமான சுற்று நிருபம் ஒன்றை இப்பகுதி ஓய்வூதியம் பெறுவோருக்கு அனுப்பி இலகுவாக ஓய்வூதியத்தைப் பெறும் வழிவகைகள் பற்றி அதில் எடுத்துக் கூறியுள்ளார்.

இடமின்மையால்
'ஒலிவர் ருவிஸ்ற்'
இவ்வாரம் இடம்
பெறவில்லை.




# சமூக மறுமலர்ச்சிக்கு உழைத்தவர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுேர் உறையும் தெய்வத்துள் ஒருவராகிவிட்ட அமரர் சுப்பையா கார்த்திகேசுவின் மறைவு சோதிடத் துறையில், வைத்தியத்துறையில், சமயத் துறையில், சமூக சேவையில், விவசாயத் துறையில் ஈடுபாடுடைய அனைவருக்கும் பெரும் இழப்பையும் ஆழ்ந்த துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

முரசுமோட்டை, பளை, தர்மக்கேணி ஆகிய பகுதிகளில் பொது ஸ்தாபனங்களில் பொறுப்பான பதவிகளில் இருந்து நற்சேவைகளையாற்றி சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்திய. இவர், யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரிக் கமிட்டி உறுப்பினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அகிலஉலக ஆயுள்வேத வைத்தியர்கள் மகாநடு 22-11-82ல் பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பொழுது பகுதிநேர நிகழ்ச்சி ஒன்றில் அன்னர் தலைமை தாங்கி அனைவரின் பாராட்டையும் பெற்றவர்

புங்கையூர்
என் எஸ்.கே.இலக்சுமணன்



கண்டியில் இந்து கலாசார மண்டபத்தில் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு எஸ். தொண்டமான் தலைமையில் நடைபெற்ற தமிழ் தின விழாவில் கண்டி இந்து சிரேஷ்ட கல்லூரி மாணவிகள் வளாகப் பாடல் பாடுவதையும் யாழ் சுன்னுகம் ராமநாதன் கல்லூரி மாணவி செல்வி சிவகங்கா பாஓதல் பாடுவதையும் (முதற்பரிசு பெற்ற மாணவி) மாத்தளை பாரதிய வித்தியாலய மாணவி முதற்பரிசு நாடகத்துக்கான பரிசை செல்வி கௌரி சோமசுந்தரம் அமைச்சரிடம் பரிசு பெறுவதையும் படத்தில் காண்க (படப்பிடிப்பு: கிங்ஸ்லி எஸ். செல்லையா)

## தகர்க்கப்பட்ட பொலிஸ் நிலையத்தை மக்கள் பார்த்தனர்!

(அலுவலக, சாவகச்சேரி நிருபர்கள்)

சாவகச்சேரியில் நேற்று நவீன சந்தைக் கடைகள், பெரும்பாலானவை பூட்டப்பட்டிருந்தன.

நேற்று சந்தை நாளாக இருந்த போதிலும் வழக்கம் போல் சந்தை கூடவில்லை. பஸ்நிலையத்தில் பஸ்கள்குறைவாகக் காணப்பட்டது. பிரயாணிகளும் குறைவாக இருந்தனர்.

தகர்க்கப்பட்ட சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தை நேற்றும் மக்கள் சென்று பார்வையிட்டனர்.

கடந்த தாக்குதலின்போது வெளியேறிய பொலிஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள சில வீடுகளுக்கு நேற்று மீண்டும், வீட்டுக்காரர்கள் வந்திருந்தனர். சாவக்ச்சேரியில் பதற்றம் தொடர்ந்து இருந்து வருகின்றது. [சு]

## தமிழ் கான்ஸ்டபிள் சடலம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில், மரணமான 27 பொலிஸில், அடையாளம் காணப்பட்ட ஒரே ஒரு தமிழ்ப் பொலிஸ் கான்ஸ்டபிளான நீர்வேலியைச் சேர்ந்த பொன்னுத்துரையின் சடலம், அவரது மைத்துனரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் திரு தவலிங்கத்தின் உத்தரவின்பேரில், சடலம் அவரது மைத்துனர் பொன்னையா கனகநாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ் ஆஸ்பத்திரி பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரி ஆர். பாலசுப்பிரமணியம். இறுதி மரியாதை செலுத்தி சடலத்தை ஒப்படைத்தார்.

## கிழக்குக் கடலில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கடல்பகுதியில்இயந்திரப்படகுகளில் தமிழ் தீவிரவாதிகள் மட்டக்களப்பு நோக்கிவந்து கொண்டிருப்பதாக பாதுகாப்புப்படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலைத்தொடர்ந்து மட்டக்களப்பு பொலிஸார், இராணுவத்தினர் விமானப்படையினர் ஆகியோர் அவ்விடத்துக்கு விரைந்ததாகவும் அச்சமயம்கடலில் வந்துகொண்டிருந்த இயந்திரப்படைகை இப்படையினர் கடலில் சுற்றிவளைத்தனர். விமானப்படையினர் ஹெலிகெப்டர் மூலம் மேலே பறந்தும் மற்றயபடையினர் வள்ளத்தை சுற்றிவளைத்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தபோது 4 பேர் கொல்லப்பட்டதாகவும் 4 பேர்காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

கரையில் ஒதுங்கிய இப்படகை கைப்பற்றிய ஆயுதப்படையினர் அதிலிருந்து 9 துப்பாக்கிகள் 30 கைக்குண்டுகள் 3000 தோட்டாக்கள் உட்பட பல ஆயுதங்களை கைப்பற்றியதாகவும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்தது,

மட்டக்களப்பிலுள்ள அரசினர் ஆஸ்பத்திரிகளுக்கு இதுவரை எந்தவொரு சடலமும் அனுமதிக்கப்படவில்லை.

## எம். ஜி. ஆர். பேசுகிறார்

(நியூயோர்க்)

தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். இப்போது சில வார்த்தைகளை பேசுகிறார். இரு வாரங்களில் அவர் நன்றாகப் பேசுவார் என்றுஅவருக்கு 30 ஆண்டுகள் குடும்படாக்டராக இருக்கும் டாக்டர் சுப்பிரமணியம் நேற்றுஇங்கு தெரிவித்தார். உடல் நிலை வேகமாகத் தேறிவருவதாகவும் அவர் கூறினார்.

## சத்வால் மறுப்பு

[கொழும்பு]

சாவகச்சேரி பொலிஸ் நிலையத் தாக்குதலில் சென்னையிலுள்ள தமிழ் தீவிரவாத இயக்கம் ஒன்று சம்பந்தப்பட்டிருக்கிறது என்ற செய்தி தொடர்பாக இலங்கை வெளிவிவகார அமைச்சு இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவராலயத்துடன் தொடர்புகொண்டுள்ளது என்ற உள்ளூர் பத்திரிகைச் செய்தியை இலங்கையிலுள்ள இந்தியத் தூதுவர் திரு. சத்வால் மறுத்துள்ளார்.

''இலங்கை அரசு இது தொடர்பாக தம்மிடம் எதுவித ஆலோசனைகளையும் செய்யவில்லை'' என்றும் அவர் தெரிவித்தார்.

## திருட்டு!

[யாழ்ப்பாணம்]

இருபாலைச் சந்தியிலுள்ள கடையொன்றிலிருந்து பற்றரி,சிகரட் உட்பட 2,500ரூபா பெறுமதியான பொருட்கள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திருடப்பட்டுள்ளது.

## 14 பேர் மர்ம...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யென்றும் 14 பேருக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லையென்றும் அவர் தெரிவித்துளளார்.

இந்த சடலங்கள் தகர்க்கப்பட்ட பொலிஸ்நிலைய கட்டிட இடிபாடுகளுக்குகிடையிலேயே மீட்கப்பட்டன

சந்திரா டி சில்வா என்ற கான்ஸ்டபிள் தப்பித்து ஓடி, ஆனையிறவுத் தடை முகாமுக்குச் சென்று, அங்கிருந்து ஹெலிகாப்டரில் குருநகருக்கு வந்துசேர்ந்ததாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## பொலிஸ் கூட்டதில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைதுசெய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின் உறவினர்களான சுமார் 75 பெண்கள் நேற்று முன்தினம் மூன்று மினி பஸ் வண்டிகளில் மட்டக்களப்பு கச்சேரிக்குவந்து அரசாங்க அதிபர் திரு. எம். அந்தோனி முத்துவைச் சந்தித்தனர். கைது செய்யப்பட்டவர்களை விடுதலைசெய்விக்கும்படி அவர்கள் அழுது மன்றாடினர்.

இதனைத் தொடர்ந்து திரு. அந்தோனிமுத்து மட்டக்களப்புப் பொலிஸ் பகுதியினருடன் தொடர்புகொண்டார். இன்னும் ஓரிரு தினங்களில் கைதானவர்கள் விடுதலையாவார்களென்று தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் கைகளில் சாப்பாட்டுப் பார்சல்களை வைத்திருந்தனர். தடுத்து வைக்கப்பட்டுள்ள தமது உறவினர்களுக்கு உணவு வழங்கப்படவில்லையெனத் தாம் அறிந்ததாகவும், ஆகையினாலேயே அவர்களுக்கு வழங்க உணவுப் பொட்டலங்களைத் தாம் கொண்டுவந்திருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

மட்டக்களப்பு பிரஜைகள் குழுச் செயலாளர் திரு.பிரின்ஸ் காசிநாதர் இப்பெண்களிடம், கைதானவர்களுக்கு உணவு வழங்கப்படுவதுபற்றித் தான் பொலிஸ் அதிபருடன் கலந்து ஆவனசெய்வதாக உறுதியளித்தார். (கி)

## மயிலிட்டிப் பகுதியில் மதகுகள், வீதிகள் பலத்த சோதனை!

[யாழ்ப்பாணம்]

மயிலிட்டிப் பகுதியில் மதகுகள், வீதிகள் ஆயுதப் படையினரால் சோதனையிடப்பட்டன.

நேற்று முன்தினம் இராணுவத்தினர் தங்கள் கவச வண்டிகளைப் பாதுகாப்பான இடத்தில்விட்டுவிட்டு வீதிகளில் நடந்துசென்று குண்டுகள் புதைத்துவைக்கப் பட்டிருக்கிறதா என்று நுணுக்கமாகப் பரிசோதித்தனர்.

இரு ஹெலிகொப்டர்களும், பலாலி இராணுவ முகாமுக்கு மேல் பல தடவை வட்டமிட்டுப் பறந்தவண்ணமிருந்தன.

நேற்று முன்தினம் காலை தொடக்கம் இரவுவரை விமானங்கள் பலாலி விமான நிலையம வந்து சென்றவண்ணமிருந்தன.

இதனால் இப்பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டது. (மா)

## சோமாலியா விமானம் கடத்தப்பட்டது

(அடிஅபாஸ்)

150 பிரயாணிகளுடன் எகிப்தின் தலைநகர் கெய்ரோவை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த சோமாலியா நாட்டுவிமானம் ஒன்று எதியோப்பியாவுக்கு கடத்தப்பட்டுள்ளது.

இந்த விமானம் தற்போது எதியோப்பியாவின் தலைநகர் அடிஅபாஸில் இறக்கப்பட்டுள்ளது.

விமானத்தை கடத்தியவர்கள் அவர்களது நிபந்தனைகள் பற்றி விபரம்எதுவும்இதுவரை தெரியவில்லை.

எதியோப்பியாவும் சோமாயாவும் பகைநாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## எம். ஜி. ஆர். வேட்பு மனு தாக்கல்

(சென்னை)

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள சட்டப்பேரவைத் தொகுதிக்கு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் சார்பில் நேற்று வேடபுமனு தாக்கல் செய்யப்பட்டது.

மதுரை மாவட்டத் தேர்தல் அதிகாரியிடம் இந்த வேட்பு மனு தாக்கல் செய்யப்பட்டது.

மதுரைமாவட்டம் ஆண்டிப்பட்டித் தொகுதியில் திரு. ராமச்சந்திரன் போட்டியிட விருப்பது தெரிந்ததே. (வெ)

## குழிகள் இருக்க பஸ் சேவையும் நடந்தது!

[யாழ்ப்பாணம்]

கைதடி நுணுவில் வீதியில் உள்ள குண்டுவெடிப்பினால் ஏற்பட்ட பாரியகுழிகள் நிரவப்படாதநிலையிம் நேற்று வ.போ.ச பஸ் சேவை அவ்வீதியால் நடைபெற்றது.

குழிகளில் மழை நீர் தேங்கி நிற்கிறது. இதனால் அருகிலுள்ள மண் இடிந்து குழிகளில் அகலம் விரிவடைகிறது. [கு]

## கொடிகாமத்தில் ரூ. 10 லட்சம் புதிய சந்தை தகர்க்கப்பட்டது!

(யாழ்ப்பாணம்)

சுமார் பத்துலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுமுக்கால் பகுதி பூர்த்தியாகியிருந்த கொடிகாமம் நவீன சந்தை கட்டடம், நேற்று முன்தினமிரவு, தாக்கப்பட்டதால், சுவர்கள் யாவும், இடிந்து சரிந்து விழுந்துள்ளது.

சுமார் 50 பேரைக்கொண்ட கோஷ்டியினர் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில், அலவாங்கு, மற்றும் இரும்பு ஆயுதங்களால், இந்த நவீன சந்தை கட்டடங்களை தாக்கியதாக கூறப்படுகிறது நேற்று அதிகாலைவரை இத்தாக்குதல் நடந்த்தாக கூறப்படுகிறது.

1976ம் ஆண்டு கச்சாய்கிராம சபை நிர்வாகம் இருந்த காலத்தில், இச்சந்தைக்கான வரைபடம் தயாரிக்கப்பட்டு, மேலிடத்து அங்கீகாரம் பெறப்பட்டது. பின் சபை இல்லாத காலத்தில் உள்ளூராட்சி அதிகாரிகளினால் நிதிஒதுக்கப்பட்டு கட்டடவேலைகள் நடைபெற்று முக்கால் பகுதியுடன் வேலைகள் நிறுத்தப்பட்டது. (க)

## இரு வாரங்களில் 3034 விண்ணப்பம்

[சுண்டிக்குளி]

யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் இரு வாரங்களில் மட்டும் மூவாயிரத்து முப்பத்து நான்கு (3034) விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன. இவை யாவும் நேற்று முன்தினம் ரயில்மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் யாழ். செயலகத்தில் கடவுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பங்கள் முடிந்து 3 மாதங்கட்கு மேலாகியும் இதுவரை இவ் விண்ணப்பங்கள் வந்து சேரவில்லை இதனால் விண்ணப்பதாரர்கள் வெளியில் கூடுதல் விலை கொடுத்தே விண்ணப்பப்பத்திரங்களை வாங்க வேண்டியுள்ளது.

## 10 பேர் கைது

[முல்லைத்தீவு]

முல்லைத்தீவில் நேற்றுக்காலை சந்தேகத்கின் பெரில் 10 பேர் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்விடுதலைசெய்யப்பட்டனர்.

## ஆசிரியர் சம்பளம் தாமதமாகும்

[மானிப்பாய்]

ஆசிரியர்களுக்கு தனிப்பட்ட பெயருக்கு காசோலைகள் வழங்கப்பட இருப்பதைத் தொடர்ந்து சம்பளம் குறிப்பிட்ட தினத்திற்கு கிடைக்கமாட்டாதென தெரியவருகிறது,

போதிய ஊழியர்கள் யாழ். கல்வித் திணைக்களத்தில் இல்லாதிருப்பதால் எவ்வித தாமதம் ஏற்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே சமயத்தில் வங்கியில் கணக்குகள் வைத்திராத ஆசிரியர்கள் தங்கள்பகுதியில் உள்ள கிராம வங்கியில் சேமிப்புக் கணக்கு ஒன்றைத் திறக்குமாறும் கோரப்பட்டுள்ளனர்.

கல்வி அமைச்சின் செயலாளரின் கடிதப்படியே இம்மாதம் தொடக்கம் ஒவ்வொரு ஆசிரியருக்கும், அதிபர்களுக்கும் தனிப்பட்ட பெயருக்கு காசோலைகள் வழங்கப்பட இருப்பதாகவும் யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

## பஸ் மூலம் தபால்சேவை நேற்று இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்றுக் காலை பஸ்மூலமான தபால் சேவை நடைபெறவில்லை.

ஊரடங்கு காலை 6 மணி வரை இருந்ததால் தபால் நிலையஊழியர். கந்தோருக்கு வந்துசேரவில்லை என்றும் 8 மணிக்கு பின்னரே வருவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டதால் தபால் பைகளை எடுக்காமல் பஸ் புறப்பட்டது. (க)

## சோதனை

[கொழும்பு]

வடபகுதியிலிருந்து வரும் வாகனங்கள் கொழும்பு நகருக்குச் செல்வதற்கு முன்னர் விக்டோரியா களனி பாலங்களில் பொலிசாரினால் பலத்த சோதனையிடப்படுகின்றது.

சகல பியராணிகளின் பொருட்களும் சோதனையிடப்படுகின்றது. இவர்களிடம் அடையாள அட்டையும் கேட்கப்படுகின்றது.

## யாழ். பல்கலைக்கழக தேர்வு விபரங்கள்

[யாழ்ப்பாணம்]

யாழ் பல்கலைக்கழக தேர்வுகள் நடைபெறும் நாட்கள் பற்றியும் தேர்வுகள் நடைபெறும் நேரங்கள் பற்றியும்,துணைவேந்தர் பேராசிரியர் வித்தியானந்தன் அறிவித்துள்ளார்,

இம்மாதம் 23 ம் தேதி தொடக்கம் நடைபெறவிருந்த கலைப்பீடத் தேர்வுகள் பின்போடப்பட்டுள்ளது. இத்தேர்வுகள் இம்மாதம் 26ந் தேதி முதல் முன்பு தரப்பட்ட ஒழுங்கின்படி நடைபெறும்.

25ம்தேதி ஆரம்பமாகவிருந்த 3ம் வருட விஞ்ஞான தேர்வுகள் 29ம் தேதி முதல் ஆரம்பமாகி முன்புதரப்பட்ட ஒழுங்கின்படி நடைபெறும்.

விஞ்ஞான பீட செயல்முறை தேர்வுகள் பற்றிய விபரங்களைத் துறைத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். தேர்வுகள் நடைபெறும் நேரம் மாற்றப்பட்டுள்ளது.

காலையில் நடைபெறும்தேர்வுகள் 26ம் தேதி காலை 8.30 முதல் 11.30 வரை நடைபெறும். பிற்பகல் நடைபெறும் தேர்வுகள். நண்பகல் 12 30 முதல் 3.30 வரை நடைபெறும், (க)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.